# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம்

*(2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

2007, செத்தெம்பர் மாதம் 21 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 52.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

**2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம்**

[*2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாசிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஒ. 40/2006*

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையைத் தாபிப்பதற்கும் புதுப்பிக்கப்படற்பாலனவான வலு மூலவளங்களை அபிவிருத்தி செய்வதற்கும் ; வலு அபிவிருத்தி இடப்பரப்புகளை வெளிப்படுத்துவதற்கும் ; வலு வினைத்திறனான வழிமுறைகளையும் பேணிக்காத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கும் ; வலு ஒப்படைப்பிலும் தகவல் முகாமையிலும் வலு உறுதிப்பாட்டையும், நம்பகத்தன்மையையும், சிக்கனமாந்தன்மையையும் மேம்படுத்துவதற்கும் ; 1985 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மின்சக்தி மீதப்படுத்தல் நிதியச் சட்டத்தை நீக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** *இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

## பாகம் I

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையைத் தாபித்தல்**

*இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையைத் தாபித்தல்.*

**2.** *(1) (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை என அழைக்கப்படவேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.*

*(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இடையறாவழி*

யுரிமையும் பொது இலச்சினையொன்றும் உடையதாதலும் வேண்டும் ; அத்துடன் அப்பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

*அதிகாரசபையின் முகாமைச் சபையை அமைத்தல்.*

**3.** (1) அதிகாரசபையின் அலுவல்களினது முகாமையும் நிருவாகமும், (இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முகாமைச் சபைக்குரித்தாக்கப்படுதல் வேண்டும் ; இது, பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :-

(i) மின்சக்தி மற்றும் வலு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ii) உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(iii) கைத்தொழில்கள் மற்றும் முதலீட்டு மேம்படுத்துகை என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(iv) காணிகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(v) கமத்தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(vi) பெருந்தோட்டத்தொழில்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(vii) சூழல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக வுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(viii) நீர்ப்பாசனம் மற்றும் மகாவலி அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ix) போக்குவரத்து என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(x) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமித்தர் ;

(xi) அறிவியல் மற்றும் தொழினுட்பவியல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ; அத்துடன்

(xii) இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி :

ஆயின், இப்பந்தியின் (i) முதல் (xi) வரையி லான உட்பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட விடயங்களுள் இரண்டு அல்லது அவற்றுக் கதிகமானவை, தனியொரு அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுமிடத்து அல்லது அவரின் பொறுப்பில் தொடர்ந்திருக்குமிடத்து, அவ்வமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட செயலாளர்கள் அத்தகைய அமைச்சுக்கு நியமிக்கப்படுமிடத்து, அப்போது, அத்தகைய செயலாளர்களுள் ஒருவர் மட்டுமே இப்பந்தியின்கீழ் சபையின் உறுப்பினரொருவராதல் வேண்டும் ;

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டிய பின்வரும் ஆட்கள் (அவர்கள் இதனகத்துப்பின்னர் "நியமிக்கப் பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவர்) :–

(i) இலங்கை வலு முகாமையாளர்கள் கழகத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய கழகத்தின் பிரதிநிதியொருவர் ;

(ii) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கையிலுள்ள அபிவிருத்தி நிதி வங்கிகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான ஆளொருவர் ;

(iii) புதுப்பிக்கப்படற்பாலதான வலு கைத்தொழிலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ;

(iv) இலங்கை வர்த்தகப் பணிக்கூடத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய பணிக் கழகத்தின் பிரதிநிதியொருவர் ;

(v) தொழில், எந்திரவியல், நிதி, முகாமை அல்லது சட்டம் என்னும் துறைகளில் தகைமைபெற்றுள்ளவர்களும் எண்பிக்கப்பட்ட அறிவும் அனுபவமும் கொண்டவர்களுமான ஆட்கள் மூவர் ;

(vi) கிராமிய வலுச் சேவைத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான ஆளொருவர் ; அத்துடன்

(vii) புதுப்பிக்கப்படற்பாலதான வலு அபிவிருத்தி என்னும் துறையில் அல்லது வலுவைப் பேணிக்காத்தல் மற்றும் வினைத்திறன் என்னும் துறைகளில் அனுபவமுடைய ஆளொருவர் ; இவரே சபைத் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்துக்கான அட்டவணையின் ஏற்பாடுகள், சபையுறுப்பினர்கள், அதன் கூட்டங்கள் மற்றும் சபையின் இலச்சினை என்பனவற்றுக்கும் அவை தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

அதிகாரசபையின் குறிக்கோள்கள்.

**4**. அதிகாரசபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) வலு உறுதிப்பாட்டை அதிகரிக்கும் நோக்குடன் புதுப்பிக் கப்படற்பாலனவான வலு மூலவளங்களை அடையாளங் காணுதலும், மதிப்பீடுசெய்தலும், அபிவிருத்திசெய்த லும், அதன்மூலம் நாட்டுக்குப் பொருளாதார மற்றும் சமூக நன்மைகளைப் பெறுதலும் ;

(ஆ) வலுவை வீட்டு, வர்த்தகஞ்சார், கமத்தொழில்சார், போக்குவரத்து, கைத்தொழில்சார் துறைகளிலும் வேறு ஏதேனும் இயைபான துறையிலும் பயன்படுத்துவதற் காக, வலு வினைத்திறனைச் சீராக்குதல் மற்றும் வலு வைப் பேணிக் காத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை அடை யாளங் காணுதலும், மேம்படுத்துதலும், வசதிப்படுத்து தலும், செயற்படுத்துதலும், முகாமைசெய்தலும்;

(இ) கொள்கை அபிவிருத்தி மற்றும் பகுப்பாய்வும் தொடர்பு பட்ட தகவல் முகாமையும் என்பனமூலம், நாட்டுக்கான வலு ஒப்படைப்பின் உறுதிப்பாட்டையும், நம்பகத் தன்மையையும், சிக்கனத்தன்மையையும் மேம்படுத்து தல் ; அத்துடன்

(ஈ) நாட்டுக்கு வலுவின் ஆகக்குறைந்த பொருளாதார செலவுடனும் உறுதிப்பாட்டுடனும் ஒத்திருக்கின்ற அதன் குறிக்கோள்களை அதிகாரசபை செயற்படுத்துவதற்குப் போதிய நிதிகள் கிடைக்கக்கூடியனவாகவிருத்தலை உறுதிப்படுத்துதல்.

## பாகம் II

### சபையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்

**5.** சபையானது பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :— *சபையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்.*

(அ) வலுமீதான தேசியக் கொள்கையை வகுத்தமைப்பதில் அமைச்சருக்கு உதவுதல் ;

(ஆ) பின்வருவன உட்பட, எல்லாப் புதுப்பிக்கப்படற்பால னவான வலு மூலவளங்களையும், தோதான மாற்றுத் தொழினுட்பவியல்களையும், மாற்று மற்றும் பயன் பாட்டு நியமங்களையும் செயல்முறைகளையும் அடை யாளங்காணுதலும், மீதப்படுத்தலும், முகாமைசெய் தலும் :—

(i) புவியியல் இடங்களில் அமைவிடம், நுகர்தகு பயனெதிர்பார்ப்பு, காணிச் சொத்தாண்மை மற்றும் ஏலவேயுள்ள உள்ளகக் கட்டமைப்புச் செயலிடங்கள் என்பவற்றைச் சுட்டிக்காட்டி இலங்கையிலுள்ள புதுப்பிக்கப்படற்பாலனவான எல்லா வலு மூலவளங்களும் பற்றிய பொருட் பதிவேடொன்றைத் தாபித்தலும், பேணுதலும், நாளதுவரையாக்குதலும் ; அத்துடன்

(ii) வர்த்தக ஈடுபடுத்துகைக்கும் வகைமாதிரிக்குப் பொருத்தமான செயல்நிறைவேற்றத் தரவுக்கும் புதுப்பிக்கப்படற்பாலனவான எல்லா வலுத் தொழினுட்பவியல்களினதும் முதிர்வுமட்டத்தைச் சுட்டிக்காட்டி அவை பற்றிய பொருட்பதிவே டொன்றைத் தயாரித்தலும், பேணுதலும், நாளதுவரையாக்குதலும் ;

(இ) பின்வருவன உட்பட, நாட்டில் புதுப்பிக்கப்படற்பால தான வலு உருவாக்கத்துக்கான முதலீடுகளை ஊக்கு விப்பதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் உகந்த தாகவுள்ள சூழலொன்றை அபிவிருத்தி செய்தல் :—

(i) புதுப்பிக்கப்படற்பாலதான வலுக் கருத்திட்டங்கள் பற்றிய வழிகாட்டுநெறிகளை அபிவிருத்திசெய்த லும் முதலீட்டாளர்களாக வரவுள்ளோரிடையே அவற்றைப் பரப்புதலும் ; அத்துடன்

(ii) நெய்யரிமீதான நெற்பரிக்கு அப்பாலானவையு மான புதுப்பிக்கப்படற்பாலதான வலுக்கருத் திட்டங்களை மதிப்பீடு செய்தலும் அங்கீகரித்தலும் பற்றி, இயைபான அரச முகவர் நிலையங்களின் ஒத்திசைவுடன் வழிகாட்டுநெறிகளை அபிவிருத்தி செய்தல் ;

(iii) நெய்யரிமீதானவையும் நெய்யரிக்கு அப்பாலனவையுமான புதுப்பிக்கப்படற்பாலதான வலுக் கருத்திட்டங்களைக் கொண்டு நடாத்துவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளுதல் ;

(iv) புதிய வகையினவான புதுப்பிக்கப்படற்பாலனவான வலு மூலவளங்களிலும் தொழினுட்பவியல்களிலும் கருத்திட்ட உத்தேசங்களை வகுத்தமைப்பதன்மூலம் முதலீட்டாளர்களுக்கு உதவி வழங்குதல் ; அத்துடன்

(v) வலுமீதான தேசியக் கொள்கைக்கிணங்க, புதுப்பிக்கப்படற்பாலதான வலு அபிவிருத்தியின் வளர்ச்சியைப் பின்னடையச் செய்கின்ற தொழினுட்ப அல்லது வேறெவையேனும் வரையறைகளை எதிர்கொள்வதற்கான செய்முறையை வசதிப்படுத்துவதற்கான வழிவகைகளைத் தேடிக்கண்டறிதல் ;

(ஈ) பின்வருவன உட்பட, புதுப்பிக்கப்படற்பாலனவான வலு மூலவளங்களை மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதனை இலக்காகக்கொண்ட கொள்கைகளைப் பகுப்பாய்வு செய்தலும் விதந்துரைத்தலும் திட்டங்களைத் தயாரித்தலும் :-

(i) குறிப்பிட்ட தொழினுட்பவியல்களுக்காக இடைக்கால இலக்குகளுடன் நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தலும் அத்தகைய திட்டங்களைச் செயற்படுத்துவதனை மேம்படுத்துதலும் வசதிப்படுத்துதலும் ; அத்துடன்

(ii) போட்டாபோட்டி நெறிகளின் அடிப்படையிலான ஊக்குவிப்புச் செயல்முறைகளையும் உள்ளபடியான வலுப் பிறப்பின் அடிப்படையிலான குறிப்பிட்ட தொழினுட்பவியல்களையும் உருவாக்குதலும் ;

(உ) பின்வருவன உட்பட, புதுப்பிக்கப்படற்பாலதான வலு அபிவிருத்தியிலான முதலீடுகளையும், வலு வினைத் திறனின் சீராக்கத்தையும் பேணிக்காத்தலையும், கிராமிய வலுச் சேவைகளையும் ஊக்குவிப்பதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும், மற்றும் நாட்டிலுள்ள வலுத் துறையின் நிலைபெறுதகு தன்மையையும் சேமக்காப்பையும் உறுதிப்படுத்துவதற்காகவும் உகந்த சூழலொன்றை அபிவிருத்திசெய்தல் :-

(i) புதுப்பிக்கப்படற்பாலதான வலு அபிவிருத்தி, வலு வினைத்திறனின் மேம்படுத்துகை, சீராக்கமும் பேணிக் காத்தலும் மற்றும் கிராமிய வலுச் சேவைகள் என்பவற்றுக்காக, கடன் அதிகரிப்பு மற்றும் ஏனைய வசதிகள் மூலம் நிதிகளை திரட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துதல் ; அத்துடன்

(ii) இறக்குமதி செய்யப்பட்ட வலுவின்மீது தங்கியிருத்தலைக் குறைக்கின்ற, புதுப்பிக்கப்படற்பாலதான வலு உருவாக்கம், வலு வினைத்திறனின் சீராக்கம், பேணிக் காத்தல் மற்றும் கிராமிய வலுச் சேவைகள் என்பவற்றிலான வழிகாட்டுக் கருத்திட்டங்களுக்கான மானியங்களும் தொடக்க மூலதனமும் உட்பட, நிதிகளை வழங்குதல் ;

(ஊ) அதிகாரசபையின் குறிக்கோள்களுடன் ஒத்திருக்கும் வகையில் வலுத்துறையில் அக்கறைகொண்டுள்ளோரின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்காகவும் எவரேனும் அக்கறைகொண்டுள்ளவரினால் நிறைவேற்றப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காகவும் தொழினுட்ப, நிதி உதவியை வழங்குதல் ;

(எ) பின்வருவன உட்பட, தூய உற்பத்திச் செயல்முறைக்கான பெயர்குறிக்கப்பட்ட தேசிய முகவர் நிலையத்துக்கும் வலுத்துறை தூய உற்பத்திக் கருத்திட்டச் செயற்பாடுகள் பற்றிய கருத்திட்ட உருவாக்குவோருக்கும் தொழினுட்ப உதவி வழங்குகின்ற இலங்கையில் தூய உற்பத்திச் செயல்முறையின் (தூஉசெ) தேசிய தொழினுட்ப சேவை முகவர் நிலையமாகப் பணியாற்றுதல் :—

(i) தடைகளை மேற்கொள்ளுவதற்கும் வர்த்தக நிதியளித்தலை அணுகுவதற்கும் கருத்திட்ட உருவாக்குவோருக்கு உதவுகின்ற புதுமைமிகு திட்டங்களைத் திட்டமிடுதலும், அபிவிருத்திசெய் தலும், செயற்படுத்தலும் ; அத்துடன்

(ii) ஏதேனும் ஒழுங்கமைப்பினால் ஏதேனும் சூழற் பாதுகாப்பு உந்துதலின்கீழ் கிடைக்கக்கூடியன வாக்கப்பட்ட சலுகை முறையான நிதிகளை அணுகுவதற்குக் கருத்திட்ட உருவாக்குவோருக்கு வசதியளித்தலும் உதவுதலும் ;

(ஏ) பயனெதிர்பார்ப்புள்ள புதுப்பிக்கப்படற்பாலதான வலுவை நிச்சயிப்பதற்கு ஏதேனும் புவியியல் இடப் பரப்பில் பூர்வாங்க ஆய்வுகளையும் நுண்ணாய்வுகளை யும் நடாத்துதல் ;

(ஐ) அமைச்சரினால் விடுவிக்கப்படக்கூடிய எவையேனும் பணிப்புகளுக்கமைய, ஏதேனும் அபிவிருத்தி இடப் பரப்பினுள் அவசியமான தரவைச் சேகரித்தலும், புதுப்பிக்கப்படற்பாலதான வலு மூலவளத் திட்டமிடு தலையும் மதிப்பிடுதலையும் நிறைவேற்றுதலும் ;

(ஒ) எவையேனும் பகிரங்க அல்லது தனியார் நிறுவனங் களிடமிருந்து அல்லது வேறெவையேனும் மூலவளங் களிலிருந்து புதுப்பிக்கப்படற்பாலதான வலுத்திட்டமிடு தலுக்காகவும் மதிப்பிடுதலுக்காகவும் தேவைப்படும் இயைபான தரவைப் பெறுதல் ;

(ஓ) இயைபான முகவர் நிலையங்களின் கலந்தாலோசனை யுடன் நெய்யரிமீதானவையும் நெய்யரிக்கு அப்பாலான வையுமான புதுப்பிக்கப்படற்பாலதான வலுக் கருத்திட் டங்களின் அங்கீகாரச் செய்முறையைக் கண்காணித் தலும், மெருகூட்டுதலும், அதன்மீது பின்தொடர் நடவடிக்கை எடுத்தலும், நடவடிக்கைமுறைசார் தேவைப்பாடுகளைப் பெருப்பிப்பதற்கும் கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற செயல்முறையைத் துரிதப்படுத்துவதற் கும் அத்தகைய முகவர் நிலையங்களுக்குத் தொழினுட்ப மற்றும் வேறு ஆற்றல் வழிமுறை உதவியையும் வசதி களையும் வழங்குதலும் ;

(ஔ) வலு வினைத்திறனின் சீராக்கத்துக்காகவும் பேணிக் காத்தல் வழிமுறைகளுக்காகவும் கிராமிய வலுச் சேவைகளுக்காகவும் நெய்யரி மீதானவையும் நெய்யரிக்கு அப்பாலானவயுமான புதுப்பிக்கப்படற்பாலதான வலுக் கருத்திட்டங்களில் முதலீட்டாளர்களுக்கான செயலூக்க நிதிகளுக்கான அணுகுகையை வசதிப்படுத்துதல் ;

(க) நெய்யரி மீதானவையும் வலுக் கருத்திட்டங்களிலான முதலீட்டாளர்களுக்காகவும் மற்றும் வலு வினைத்திற னின் சீராக்கத்திலும் பேணிக் காத்தலிலும் கிராமிய வலுச்சேவைகளிலுமான முதலீட்டாளர்களுக்காகவும் நெய்யரிக்கு அப்பாலான வர்த்தகக் கடனுக்கான அணுகுகை யைச் சீராக்குவதற்கான கடன் உத்தரவாதத் திட்டங்கள் போன்ற கடன் அதிகரிப்பு வசதிகளைத் திட்டமிடுதலும், அபிவிருத்தி செய்தலும், செயற்படுத்து தலும், அவற்றுக் கான நிதிகளை வழங்குதலும் ;

(ங) அதிகார சபையின் குறிக்கோள்களை எய்துவதற்கு, அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட எவரேனும் ஆளு டன் கூட்டுத்திட்டங்களைச் செய்துகொள்ளுதல் ;

(ச) அரச மற்றும் தனியார்துறை ஒழுங்கமைப்புகளுக் காகவும் அவற்றின் சார்பிலும் உயர் தொழில்சார் சேவைகளை அளித்தலும் புதுப்பிக்கப்படற்பாலனவான வலு மூலவளங்களின் அபிவிருத்தியுடனும் வலு வினைத்திறன், வலுவைப் பேணிக்காத்தல் மற்றும் கோரிக்கை முகாமை என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களைப் பொறுப்பேற்றலும், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகைக ளைக் கட்டணங்களாக இறுத்தலும் ; அத்துடன்

(ஞ) அதிகாரசபையின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது உகந்ததாகக் கூடியவாறான வேறெவையேனும் நிகழ்ச்சித்திட்டங் களைத் தொடங்குதலும் செயற்படுத்துதலும் வேறெவை யேனும் செயல்களைச் செய்தலும்.

**6.** (1) சபையானது, எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, சபையின் தவிசாள ருக்கு அல்லது அதன் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு, இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்களுள், கடமைகளுள் அத்துடன் பணிகளுள் எவற்றையும் கையளிக்கலாம் என்பதுடன், தவிசாளர் அல்லது அத்தகைய அலுவலர் அல்லது ஊழியர், சபையினால் வழங்கப்படக்கூடிய எவையேனும் விசேடமான அல்லது பொதுவான பணிப்புகளுக்கமைய அத்த கைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித் தலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

*சபையின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் கையளித்தல்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், சபையானது அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

**7.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி நியமிக்கப்பட்ட தேதியி லிருந்து ஆறுமாதங்களினுள் நாட்டிலுள்ள எல்லாப் புதுப்பிக்கப் படற்பாலனவான வலு மூலவளங்களும் பற்றிய ஆய்வொன்றையும் மூலவள மதிப்பீடொன்றையும் தொடங்குவித்தல் வேண்டுமென் பதுடன், ஒவ்வோர் அபிவிருத்தி இடப்பரப்புத் தொடர்பிலும் வலுமூலள வரைபடங்களையும் புதுப்பிக்கப்படற்பாலனவான வலு மூலவளங்கள் பற்றிய பொருட்பட்டியலொன்றையும் தயாரித் தலும் வேண்டும்.

*வலுமூலவள வரைபடங்களையும் புதுப்பிக்கப் படற்பாலனவான வலு மூலவளங்கள் பற்றிய பொருட் பட்டியலையும் தயாரித்தல்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் புதுப்பிக்கப்படற்பாலதான வலு மூலவள வரைபடங்களை அல்லது புதுப்பிக்கப்படற்பாலனவான வலு மூலவளங்கள் பற்றிய பொருட்பட்டியலைத் தயாரிப்பதில், பணிப்பாளர் தலைமையதிபதி, அரசாங்கத் திணைக்களங்களி னாலும் நிறுவனங்களினாலும் மற்றும் வேறெவையேனும் முகவர் நிலையங்களினாலும் அல்லது வேறெவரேனும் ஆளினாலும் சேகரிக்கப்பட்ட அல்லது தொகுக்கப்பட்ட இயைபான தரவு, தகவல், வரைபடங்கள், ஆவணங்கள் அல்லது அறிக்கைகள் என்பவற்றைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், வலுமூலவள வரைபடங்களையும் புதுப்பிக்கப்படற்பாலனவான வலு மூலவளங்கள் பற்றிய பொருட்பட்டியலையும் தயாரிக்கும் நோக்கத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியாயமான முறையில் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் தரவு, தகவல், எவையேனும் வரைபடங்கள்,

ஆவணங்கள் அல்லது அறிக்கைகள் என்பவற்றைக் கொடுத்து தவுதல் அத்தகைய திணைக்களங்களின், நிறுவனங்களின் அல்லது வேறு முகவர் நிலையங்களின் தலைவர்களினது அல்லது வேறு ஆட்களினது கடமையாதலும் வேண்டும்.

*புதுப்பிக்கப் படற்பாலனவான வலு மூலவள அபிவிருத்தித் திட்டங்கள்.*

**8.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் மூன்றாண்டுகளுக்குப் பிந்தாமல், 7 ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட ஆய்வினதும் புதுப்பிக்கப்படற்பாலதான மூலவள மதிப்பீட்டினதும் பெறுபேறுகளின் அடிப்படையின்மீது (இதனகத்துப்பின்னர் "திட்டம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) எல்லாவற்றையும் உள்ளடக்கிய புதுப்பிக்கப்படற்பாலதான வலு மூலவள அபிவிருத்தித் திட்டமொன்றைச் சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) சபையானது, அத்தகைய திட்டம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களினுள், அத்தகைய திட்டத்துக்குத் திரிபுகள் எவையேனுமிருப்பின் அவற்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன், அவற்றை அமைச்சரிடம் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(3) அமைச்சரானவர், சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான ஒவ்வொரு செய்தித்தாளிலும் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், (2) ஆம் உட்பிரிவின்கீழ் தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் எந்த இடத்திலும் எந்த நேரங்களிலும் பொதுமக்களால் பார்வையிடப்படுவதற்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ளதோ அந்த இடத்தையும் அந்த நேரங்களையும் அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிவித்தல் வெளியிடப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள், அதன்மீது பொதுமக்களின் கருத்துரைகள் எவையேனுமிருப்பின் அவற்றைத் தெரிவிக்கும்படி பொதுமக்களைக் கோருதலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட முப்பது நாட்காலப்பகுதி முடிவடைந்ததன்மேல், அமைச்சர், அவ்வுட்பிரிவின்கீழ் பொதுமக்களினால் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட எவையேனும் கருத்துரைகளைக் கருத்திற்கொண்டு, அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய திரிபுகள் எவையேனுமிருப்பின் அவற்றுக்கமைய, திட்டத்தைத் தற்காலிகமாக அங்கீகரிக்கலாமென்பதுடன், அதனை அமைச்சரவையிடம் அதன் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(5) அமைச்சரவையினால் திட்டமானது அங்கீகரிக்கப்படு வதன்மேல், அமைச்சரானவர் அத்தகைய திட்டத்தை வர்த்தமானி யில் வெளியிடுவித்தல் வேண்டுமென்பதுடன், அது, அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(6) திட்டம் நடைமுறைக்குவருகின்ற தேதியிலிருந்து தொடங்கு கின்ற மூன்றாண்டுகளுக்கொருதடவை திட்டமானது சபையினால் மீளாயப்படுதல் வேண்டுமென்பதுடன், உட்பிரிவுகள் (2), (3), (4), (5) ஆகியவற்றின் ஏற்பாடுகள், அத்தகைய ஒவ்வொரு மீளாய் வுக்கும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதலும் வேண்டும்.

(7) அமைச்சர், சபையின் விதப்புரையின்மீது, திட்டத்துக்கும் அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்ட உத்திகளுக்கும் பயன்கொடுப் பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை விதித்துரைக்கலாம்.

## பாகம் III

### கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் குழுவும் மதியுரைக் குழுக்களும்

*மதியுரைக் குழுக்களை நியமித்தல்.*

**9.** (1) சபையானது, காலத்துக்குக்காலம், இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் அதற்கு உதவுவதற்கு, கல்விசார் அல்லது உயர்தொழில்சார் தகைமை களையுடைய அல்லது உயர்தொழில்சார் நிறுவனங்களை அல் லது அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்புகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஆட்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்படும் அத்த கைய ஆட்களைக் கொண்டுள்ளவையும், அவசியமானவையென அல்லது தோதானவையென அது கருதக்கூடியவாறானவையு மான அத்தகைய மதியுரைக் குழுக்களைத் தாபிக்கலாம்.

(2) சபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மதியுரைக் குழுவொன்றுக்கு, அது அவசியமானவையெனக் கருதக் கூடியவாறான அதன் தத்துவங்களுள், கடமைகளுள் மற்றும் பணிகளுள் அத்தகையனவற்றைக் குறித்தளிக்கலாம், ஆனால்

அவ்வாறு குறித்தளிக்கப்பட்ட அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியை அது உரிமைதுறத்தலாகாது. சபையானது மதியுரைக் குழுவொன்றினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபைத் திருத்துவதற்கான அல்லது இல்லாதொழிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மதியுரைக் குழுவொன்றின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படிகள், அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் குழு.

**10.** (1) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கவேண்டியதான கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் —

(அ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஆ) 451 ஆம் அத்தியாயமான காட்டுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட காடு பேணுதல் திணைக்களத்தின் பேணுநர் தலைமையதிபதி ;

(இ) (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பேணுநர் தலைமையதிபதி ;

(ஈ) 453 ஆம் அத்தியாயமான நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(உ) 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபையின்கீழ் நியமிக்கப்பட்ட இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஊ) 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட இலங்கை மின்சாரச் சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(எ) (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட காணி ஆணையாளர் தலைமையதிபதி ;

(ஏ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் தலைமை யதிபதி ;

(ஐ) 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் கட்டளைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட கரையோரப் பேணல் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஒ) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஓ) அபிவிருத்திக் கருத்திட்டமொன்று எந்த பிரதேச செயலாளரின் இடப்படரப்பினுள் செயற்படுத்தப்பட வுள்ளதோ அந்த பிரதேச செயலாளரின் இடப்பரப்பின் பிரதேச செயலாளர் ; அத்துடன்

(ஔ) அபிவிருத்திக் கருத்திட்டமொன்று எந்த மாகாண இடப்பரப்பினுள் செயற்படுத்தப்படவுள்ளதோ அந்த மாகாண இடப்பரப்புக்காகத் தாபிக்கப்பட்ட மாகாணச் சபையின் பிரதான செயலாளர்.

(2) அமைச்சரானவர், குழுவின் தவிசாளராக, (1) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர் தவிர, குழுவின் உறுப்பினர்களிடையேயிருந்து ஆளொருவரைப் பெயர் குறித்துநியமிக்கலாம்.

(3) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியானவர், குழுவின் எல்லாக் கூட்டங்களையும் கூட்டுபவராகப் பணியாற்றுதல் வேண்டும்.

**11.** குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :— குழுவின் பணிகள்.

(அ) நெய்யரிமீதானவையும் நெய்யரிக்கு அப்பாலானவையுமான வலுக் கருத்திட்டங்கள் தொடர்பில் தற்காலிக அங்கீகாரத்தையும் இறுதி அங்கீகாரத்தையும் அளிப்பதில், குழுவினால் அடுத்துப்பின்னர் கடைப்பிடிக்கப்படு

வதற்கான தொழினுட்ப, சூழல் மற்றும் பொருளாதார வழிகாட்டுநெறிகளை வகுத்தமைப்பது பற்றிச் சபைக்கு மதியுரையளித்தல் ;

(ஆ) அத்தகைய நெய்யரிமீதானவையும் நெய்யரிக்கு அப்பாலானவையுமான புதுப்பிக்கப்படற்பாலனவான வலுக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதன் காரண மாக எழக்கூடிய சாத்தியம் கொண்ட சூழல் ஆபத்துக் களையும் ஏனைய விளைவுகளையும் சீர்தூர்க்கிப் பார்த்தலும் மதிப்பீடு செய்தலும் ;

(இ) நெய்யரிமீதான புதுப்பிக்கப்படற்பாலனவான கருத்திட்ட மொன்றுக்கு இறுதி அங்கீகாரம் அளிக்கப்படும் பட்சத் தில் அல்லது நெய்யரிக்கு அப்பாலான புதுப்பிக்கப்படற் பாலனவான கருத்திட்டமொன்றுக்கு அங்கீகாரம் அளிக் கப்படும் பட்சத்தில், அத்தகைய சூழல் ஆபத்துக்களை, தொழினுட்ப மற்றும் வேறு சமூக பொருளாதார விளை வுகளைக் குறைப்பதற்கான வழிமுறைகளாக விண்ணப் பகாரரொருவரினால் நிறைவேற்றப்படவேண்டிய நிபந்தனைகளை விதித்தல் ;

(ஈ) நெய்யரிமீதான புதுப்பிக்கப்படற்பாலனவான வலுக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காகவும் நெய்யரிக்கு அப்பாலான புதுப்பிக்கப்படற்பாலனவான வலுக் கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்காகவும் செய்யப் பட்ட விண்ணப்பங் களின்மீது தற்காலிக மற்றும் இறுதி அங்கீகாரத்தை அளித்தல் ;

(உ) அத்தகைய கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதன் காரணமாக எவையேனும் சூழல் ஆபத்துக்களும் ஏனைய சமூக பொருளாதார விளைவுகளும் ஏற்படுத்தப் படுவதனைத் தடுக்கும் நோக்குடன் நெய்யரிமீதான வையும் நெய்யரிக்கு அப்பாலானவையுமான புதுப் பிக்கப்படற்பாலதான வலுக்கருத்திட்டங்களின் செயற் படுத்துகையைக் கண்காணித்தலும் மேற்பார்வை செய்தலும் ; அத்துடன்

(ஊ) தொழிற்பாட்டிலுள்ள புதுப்பிக்கப்படற்பாலதான வலுக் கொள்கையையும், புதுப்பிக்கப்படற்பாலதான மூலவள திட்டங்களையும் அத்துடன் புதுப்பிக்கப்படற்பாலதான

வலு அபிவிருத்தி உத்தியையும் காலத்துக்குக்காலம் பரீசிலனை செய்தலும், பரிசோதனை செய்தலும் அவசியமாகவுள்ளவிடத்து அத்தகைய கொள்கையிலும், திட்டத்திலும் உத்திகளிலுமான மாற்றங்களைச் சபைக்கு விதந்துரைத்தலும்.

## பாகம் IV

### வலு அபிவிருத்தி இடப்பரப்பை வெளிப்படுத்துதல்

*நிலைபெறுதகு வலு அபிவிருத்தி இடப்பரப்புகளை வெளிப்படுத்துதல்.*

**12.** (1) அமைச்சர், (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாட்டுக்கமையவும், ஏதேனும் இடப்பரப்பு புதுப்பிக்கப்படற்பாலனவான வலுமூல வளங்களை பேணிக் காப்பதற்காகவும், முகாமை செய்வதற்காகவும் பொருத்தமானதென அல்லது புதுப்பிக்கப்படற்பாலனவான வலு அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேம்படுத்துவதற்காகப் பொருத்தமானதெனச் சபையினால் செய்யப்பட்ட விதப்புரைகளைக் கவனத்துக் கொண்டும், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், (இச்சட்டத்தில் “அபிவிருத்தி இடப்பரப்பு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வலு அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக அத்தகைய இடப்பரப்பை வெளிப்படுத்தலாம்.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் இடப்பரப்பை அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்துமுன்னர், அத்தகைய இடப்பரப்பை அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்துவதில் கலந்தாலோசிப்பதற்கு அவசியமானவரென அல்லது தோதானவரென அவர் கருதுகின்ற அத்தகைய அமைச்சரை அல்லது அமைச்சர்களை அல்லது ஏதேனும் மாகாணசபையின் எவரேனும் அமைச்சரைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(3) இடப்பரப்பொன்றை அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்தி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று, அத்தகைய இடப்பரப்பின் எல்லைவரையறைக் கூறுகளை எடுத்துக்கூறுவதன்மூலம் அவ்விடப்பரப்பை வரையறுத்தல் வேண்டும்.

*அதிகாரசபையானது அபிவிருத்தி இடப் பரப்பினுள், புதுப் பிக்கப்படற்பாலன வான வலு மூல வளங்களை பேணிக்காப்பதற்குப் பொறுப்பாகவுள்ளது.*

**13.** அதிகாரசபையானது, அபிவிருத்தி இடப்பரப்பொன்றினுள் புதுப்பிக்கப்படற்பாலனவான வலு மூலவளங்கள் எல்லாவற்றையும் பேணிக் காப்பதற்கும் முகாமைசெய்வதற்கும் பொறுப்பாதலும், அம்மூலவளங்களின் ஆகக்கூடிய சிக்கனமான பயன்பாட்டைப் பெறும் நோக்குடன் அத்தகைய வலு மூலவளங்களை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் அவசியமான எல்லா வழிமுறைகளையும் எடுத்தலும் வேண்டும்.

*சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் குறித்தசில செயல்களைப் புரியாது தடை செய்யப்பட்டுள்ளார்.*

**14.** எழுத்திலான ஏதேனும் சட்டமுரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அபிவிருத்தி இடப்பரப்பொன்றுக்குள் அமைந்துள்ள ஏதேனும் காணியின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் ஒருவர், அதிகாரசபையின் எழுத்திலான அங்கீகாரமின்றியும், அந்நோக்கத்துக்காக அதிகாரசபையினால் விதிக்கப்படக்கூடிய எவையேனும் நியதிநிபந்தனைகளுக்கு அமையவன்றியும் அத்தகைய அபிவிருத்தி இடப்பரப்பினுள்ளான புதுப்பிக்கப்படற்பாலனவான வலு மூலவளங்களை ஏதேனும் வகையில் மாற்றக்கூடிய அல்லது அந்த மூலவளத்தினைப் பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியத்தை பொருளளவில் அத்தகைய அளவுக்கு குறைக்கின்ற அல்லது அத்தகைய மூலவளத்தில் ஏதேனும் விதத்தில் குறைவுபடச் செய்விக்கின்ற ஏதேனும் செயலைப் புரிதலாகாது அல்லது வேறெவரேனுமாள் ஏதேனும் செயலைப் புரிவதனை அனுமதித்தலாகாது.

*ஓர் அபிவிருத்தி இடப்பரப்பினுள்ளான புதுப்பிக்கப் படற்பாலனவான வலு மூலவளங்களுக்குக் குடியரசு சொத்தாண்மை உடையதாதல்.*

**15.** (1) இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகவும், 18 ஆம் பிரிவின்கீழ் அல்லது 25 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றினால் எவரேனுமாளுக்கு அளிக்கப்பட்ட உரிமைகளுக்கும் அமைய ஓர் அபிவிருத்தி இடப்பரப்பினுள்ளான காணியினது மேற்பரப்பின் மீதுள்ள அல்லது அதற்கு கீழுள்ள அல்லது காணியினது காற்றிடைவெளியிலுள்ள புதுப்பிக்கப்படற்பாலனவான, வலு மூலவளங்கள் எல்லாவற்றினதும் தனிச் சொத்தாண்மை, அவ்விடப்பரப்பினுள்ளான அத்தகைய புதுப்பிக்கப்படற்பாலனவான வலு மூலவளங்களுக்கு எவரேனுமாள் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் சொத்தாண்மை உரிமை அல்லது வேறுவகையானது எவ்வாறிருப்பினும், இத்தால் குடியரசுக்கு உரித்தாக்கப்படுகின்றது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளினது பயனைக்கொண்டு அவரது காணியின் மேற்பரப்பின்மீது அல்லது அதற்குக்கீழ் அல்லது அத்தகைய

காணியின் காற்றிடைவெளியின்மீது புதுப்பிக்கப்படற்பாலதான வலுமூலவளமொன்றுக்கான அவரது சொத்தாண்மை உரிமை அல்லது வேறுவகையான உரிமை பறிக்கப்படுகின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் அந்நோக்கத்துக்காகச் சபையினால் நியமிக்கப்பட்ட மதியுரைக் குழுவொன்றினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான நட்டஈட்டுக் கொடுப்பனவுக்கு உரித்துடையவராதல் வேண்டும். இவ்வுட்பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டுத் தொகையைக் கணிப்பதில், சம்பந்தப்பட்ட ஆளுக்கு அத்தகைய மதியுரைக் குழுவினால் கேட்கப்படுவதற்கான வாய்ப்பளிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் V

### நெய்யரிமீதானவையும் நெய்யரிக்கு அப்பாலானவையுமான புதுப்பிக்கப்படற்பாலனவான வலுக்கருத்திட்டங்கள்

நெய்யரிமீதான புதுப்பிக்கப்படற்பாலனவான வலுக் கருத்திட்டங்கள்.

**16.** (1) வேறேதேனும் சட்டத்தில் முரணாகவுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆளெவரும் ஓர் அபிவிருத்தி இடப்பரப்பினுள் அதிகாரசபையினால் அதற்கென வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் அதிகாரத்தின்கீழன்றியும் அத்துடன் 71 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமையவும் மின்சக்தியைத் தோற்றுவிப்பதற்காகவும் வழங்குவதற்காகவும் நெய்யரிமீதான புதுப்பிக்கப்படற்பாலதான வலுக் கருத்திட்டத்தில் ஈடுபடுதலோ அதனைக் கொண்டு நடாத்துதலோ ஆகாது.

(2) ஓர் அபிவிருத்தி இடப்பரப்பினுள் நெய்யரிமீதான புதுப்பிக்கப்படற்பாலதான வலுக் கருத்திட்டமொன்றில் ஈடுபடுவதற்கும் அதனைக் கொண்டு நடாத்துவதற்கும் விரும்புகின்ற ஆளொருவர், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடனும் பின்வரும் ஆவணங்களுடனும் சேர்த்து, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அதற்கான விண்ணப்பத்தைச் செய்தல் வேண்டும் :—

(அ) உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டத்தின் புவியியல் இடத்தின் வரைபடத்தினது பிரதியொன்று ;

(ஆ) பிறப்பிக்கப்படவேண்டிய மின்சக்தியின் கொள்ளளவும் அதன் மொத்த மதிப்பிடப்பட்ட செலவும் உட்பட கருத் திட்டத்தின் சுருக்கமான விவரணமொன்று ;

(இ) கடைப்பிடிக்கப்பட்ட உச்சளவினதாக்குகைக் கட்டளைக் கற்கள் உட்பட, மொத்த மதிப்பிடப்பட்ட செலவும் நிதி சார் மாதிரியும் ;

(ஈ) போதிய நிதிகள் கிடைக்கக்கூடியமை பற்றிய எண்பிப்பு அல்லது கருத்திட்டத்துக்குத் தேவையான நிதிகள் பெறப்படவுள்ள முறை

(உ) கருத்திட்ட அமைவிடம் (அது நீர்மின்சக்திக் கருத்திட்ட மொன்றாகவிருப்பின், ஆற்று அல்லது அருவி முறைமை தொடர்புபட்ட பியர் மற்றும் மின்சக்தி அகம் அல்லது அது காற்று மின்சக்திக் கருத்திட்டமொன்றாக விருப்பின், காற்று விசையாழி மற்றும் கட்டமைப்புகள், அது உயிரியற் சேதனக் கருத்திட்டமொன்றாக விருப்பின், வலு ஆக்கிடம், மின்சக்தி அகம் மற்றும் நீர்வளமூலம், அத்துடன் அது வேறேதேனும் கருத்திட்ட மாகவிருப்பின், வலுமூலவளத்துடன் தொடர்புபட்ட நிலைமாற்றுச் செயலிடம்) ; அத்துடன்

(ஊ) பிறப்பிக்கப்பட்ட மின்சாரத்தை விண்ணப்பகாரர் எவ்வாறு வெளிச்செலுத்துவதற்கு உட்கருதுகின்றாரென்பது பற்றி விளக்குகின்ற கூற்றொன்றும், பிறப்பாக்கியானது தேசிய நெய்யரியுடன் தொடுக்கப்படும் புள்ளியும், இந்நோக்கத்துக்காக நிர்மாணிக்கப்பட்ட மின்கம்பியினால் ஊடறுக்கப்படும் புவியியல் இடப்பரப்பையும் விளக்குகின்ற கூற்றொன்றும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மீது, பணிப்பாளர்—தலைமையதிபதி, அத்தகைய விண்ணப்பத்தை, ஆவணங்களுடன் சேர்த்து, அந்நோக்

கத்துக்காகப் பேணப்பட்ட இடாப்பொன்றில் உடனடியாகப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன், பதிவிலக்கமொன்றை விண்ணப்பகாரருக்கு வழங்குதலும் வேண்டும்.

தற்காலிக அங்கீகாரம் அளிக்கப்படுதல்.

**17.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, அவர் அவசியமெனக் கருதுகின்றவாறாக உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டத்தின் அத்தகைய பூர்வாங்க நுணுக்க ஆராய்வை நிறைவேற்றிய பின்னரும், இலங்கை மின்சாரச் சபையின் கலந்தாலோசனையுடனும், பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தை, உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டத்தின் மீதான அவரது அவதானிப்புகளுடன் சேர்த்து, குழுவிடம் அதன் அங்கீகாரதுக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) குழுவானது, தோதானதென அது கருது கின்றவிடத்து, —

(அ) கருத்திட்டத்துக்குத் தற்காலிக அங்கீகாரமளித்தல் வேண்டுமென்பதுடன், இது, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பகாரருக்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் உடனடியாக அறிவிக்கப்படுதலும் வேண்டும் ; அத்தகைய அறிவித்தல் விண்ணப்பகாரரினால் கிடைக்கப்பெற்றதிலிருந்து ஆறுமாதங்களினுள், அந்நோக்கத்துக்காக விதித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய ஆவணங்களையும் வேறு தகவலையும் சமர்ப்பிக்கும்படியான வேண்டுகோளொன்றுடன் சேர்த்து அவ்வாறு அறிவிக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) கருத்திட்டத்துக்குத் தற்காலிக அங்கீகாரமளிக்க மறுத்தல் வேண்டுமென்பதுடன், இது, அத்தகைய மறுப்புக்கான காரணங்களைக் குறிப்பிட்டு, விண்ணப்பகாரருக்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் உடனடியாக அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் ஆவணங்களையும் தகவலையும் சமர்ப்பிப்பதற்கான காலப்பகுதியின் நீடிப்பொன்று, ஆகக்கூடியது இன்னுமோர் ஆறுமாதகாலப்பகுதி

வரை, அதற்காக வேண்டுகோள் விடுக்கப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அளிக்கப்படலாம்.

(4) ஒராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அளிக்கப்பட்ட தற்காலிக அங்கீகாரமொன்று, அத்தகைய அங்கீகாரம் அளிக்கப்படும் தேதியிலிருந்து ஒராண்டு காலப்பகுதிக்கு செல்லுபடியாதல் வேண்டுமென்பதுடன் அவற்றுக்காக வேண்டுகோள் விடுக்கப்பட்ட ஆவணங்களும் ஏனைய தகவலும் ஒராண்டுக் காலப்பகுதி முடிவுறுமுன்னர் சமர்ப்பிக்கப்படாவிடின், தானாகவே இல்லாதாகுதலும் வேண்டும்.

*இறுதி அங்கீகாரம்.*

**18.** (1) பணிப்பாளர்—தலைமையதிபதி, அவற்றுக்காக வேண்டுகோள் விடுக்கப்பட்ட ஆவணங்களையும் ஏனைய தகவலையும் பெற்றதன்மேல், அத்தகைய ஆவணங்களையும் தகவலையும், பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பத்துடனும் அவரது விதப்புரைகளுடனும் சேர்த்து, உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டத்துக்கு இறுதி அங்கீகாரம் அளிக்கும் நோக்கத்துக்காகக் குழுவினால் கவனத்துட்கொள்ளப்படுவதற்கு, உடனடியாகக் குழுவின் முன்னர் இடுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர்—தலைமையதிபதி அனுப்பப்பட்ட ஆவணங்களையும் தகவலையும் பெற்றதிலிருந்து ஒரு மாதத்துக்குப் பிந்தாமல், பின்வருவனவற்றைச் செய்வதன் மூலம் அதன்மீதான அதன் முடிவை எடுப்பது குழுவின் கடமையாதல் வேண்டும் :—

(அ) விண்ணப்பத்தை அங்கீகரித்தலும் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலானதும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைந்ததுமான அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதன்மூலம் அவர்களின் அங்கீகாரத்தை விண்ணப்பகாருக்கு உடனடியாக அறிவிக்கும்படி பணிப்பாளர்—தலைமையதிபதிக்கு வேண்டுகோள்விடுத்தலும் ; அல்லது

(ஆ) விண்ணப்பத்தை அங்கீகரிக்க மறுத்தலும் அத்தகைய மறுப்புக்கான காரணங்களைக் குறிப்பிட்டு, அத்தகைய

மறுப்புப்பற்றி விண்ணப்பகாருக்கு உடனடியாக அறிவிக்கும்படி பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வேண்டுகோள்விடுத்தலும்.

(3) குழுவானது, 16 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினாற் பேணப்படும் இடாப்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் முடிபை எடுத்தமைக்கான காரணங்களைப் பதிதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான விண்ணப்பமொன்றை அங்கீகரிப்பதன்மீது வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இருபதாண்டு காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியாதல் வேண்டும் ; ஆயின், அபிவிருத்தியாளர், அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதிலிருந்து இரண்டாண்டுகளினுள் கருத் திட்டத்தைத் தொடங்கி மின்சாரத்தைப் பிறப்பிப்பதற்கு ஆரம்பித்தல் வேண்டும்.

(5) இருபதாண்டு காலப்பகுதியின் முடிவில், சபையானது, அபிவிருத்தியாளரின் வேண்டுகோளின்பேரிலும் குழுவின் கலந்தாலோசனையுடனும், இன்னமும் இருபதாண்டுகளை விஞ்சாத மேலதிகக் காலப்பகுதியொன்றுக்கு அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலப்பகுதியை நீடிக்கலாம்.

**19.** (1) அபிவிருத்தியாளரொருவர், வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் நடைமுறையிலிருக்கும் காலப்பகுதிக்காக, கருத்திட்டத்துக்காகப் பயன்படுத்தப்படும் புதுப்பிக்கப்படற்பாலதான வலு மூலவளங்களின்மீதான ஓர் அரசுரிமைப்பணமாக, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படவேண்டிய அத்தகைய இறுப்பனவை அதிகாரசபைக்கு வருடாந்தம் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

அரசுரிமைப் பணக் கொடுப்பனவு.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் இறுப்பனவொன்றாகச் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும், 46 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட வலு நிதியத்துக்கு அதிகாரசபையினால் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

சேதவீடுகளை அல்லது உறப்பட்ட ஏதேனும் செலவினத்திற்கான செலவைச் செலுத்துவதற்கு அதிகாரசபை ஆளாதலாகாது.

**20.** (அ) 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் கருத்திட்டமொன்றுக்கான தற்காலிக அங்கீகாரம் குழுவினால் மறுக்கப்படுமிடத்து ;

(ஆ) 18 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் கருத்திட்டமொன்றுக்கான இறுதி அங்கீகாரவளிப்பு குழுவினால் மறுக்கப்படுமிடத்து; அல்லது

(இ) அனுமதிப்பத்திரமொன்று 21 ஆம் பிரிவின்கீழ் இல்லாதாக்கப்படுமிடத்து,

அதிகாரசபையானது, 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அவற்றுக்காக வேண்டுகோள் விடுக்கப்பட்ட ஆவணங்களையும் வேறு தகவலையும் வழங்குவதில், விடயத்துக் கேற்ப, எவையேனும் சேதவீடுகளைச் செலுத்துவதற்கு அல்லது விண்ணப்பகாரரொவரினால் அல்லது அபிவிருத்தியாளரொருவரினால் உறப்படக்கூடிய ஏதேனும் செலவினத்திற்கான செலவை, அல்லது 18 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அனுமதிப்பத்திரம் அளிக்கப்பட்ட பின்னர் கருத்திட்டத்தில் தொடங்கப்பட்ட ஏதேனும் வேலையின் மீது அபிவிருத்தியாளரினால் உறப்பட்ட எவையேனும் செலவுகளை மீளளிப்பதற்கு ஆளாதலாகாது.

அனுமதிப்பத்திர மொன்றை இல்லாதாக்குதல்.

**21.** (1) பதினெட்டாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று, அபிவிருத்தியாளர்—

(அ) அத்தகைய அனுமதிப்பத்திரம் எக்கருத்திட்டம் தொடர்பில் வழங்கப்பட்டதோ அக்கருத்திட்டத்தை, அது வழங்கப்பட்டதிலிருந்து இரண்டாண்டுகளினுள் தொடங்குவதற்கும் மின்சக்தியைப் பிறப்பிக்க ஆரம்பிப்பதற்கும் தவறுமிடத்து ; அல்லது

(ஆ) அத்தகைய அனுமதிப்பத்திரம் எந்த நியதிகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு அமைய வழங்கப்பட்டதோ அந்த எவையேனும் நியதிகளுக்கு அல்லது நிபந்தனை

களுக்கு முரணாகச் செயலாற்றுமிடத்து அல்லது அவற்றுக்கு இசைந்தொழுகத் தவறுமிடத்து,

சபையின் அங்கீகாரத்துடன், பணிப்பாளர் தலைமையதிபதியினால் இல்லாதாக்கப்படலாம்.

(2) சபையானது, வழங்கப்பட்டவோர் அனுமதிப்பத்திரத்தின் இல்லாதாக்குகையை அங்கீகரிக்குமுன்னர், அனுமதிப்பத்திரம் ஏன் இல்லாதாக்கப்படலாகாதெனக் காரணங்காட்டும்படி சம்பந்தப்பட்ட அபிவிருத்தியாளருக்குச் சந்தர்ப்பமொன்றை அளிக்கலாமென்பதுடன், தோதானதும் நியாயமானதுமென அது கருதுகின்றவிடத்து, அனுமதிப்பத்திரத்தின் உத்தேசிக்கப்பட்ட இல்லாதாக்குகைக்கு வழிகோலிய, விடயத்துக்கேற்ப, எக்கால அவகாசத்தினுள் அனுமதிப்பத்திரத்தின் ஏதேனும் தேவைப்பாட்டுக்கு அல்லது எவையேனும் நியதிகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதற்கு அல்லது ஏதேனும் நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு முரணாகச் செயலாற்றாது தவிர்ப்பதற்கு உருவாக்குபவர் தேவைப்படுத்தப்படலாமோ அக்கால அவகாசத்தையும் அளிக்கலாம்.

*அங்கீகாரமளிக்க மறுப்பதற்கெதிரான அல்லது அனுமதிப்பத்திரமொன்றை இல்லாதாக்குதற்கெதிரான மேன் முறையீடுகள்.*

**22.** (1) (அ) விண்ணப்பமொன்றுக்குத் தற்காலிகமான அங்கீகாரமளிப்பதற்கான மறுப்பொன்றினால் ;

(ஆ) விண்ணப்பமொன்றுக்கு இறுதி அங்கீகாரமளிப்பதற்கான மறுப்பொன்றினால் ; அல்லது

(இ) 21 ஆம் பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரமொன்றின் இல்லாதாக்குகையினால்

இன்னலுறும் எவரேனுமாள், விடயத்துக்கேற்ப, அத்தகைய மறுப்புப்பற்றி அவருக்கு அறிவிக்கப்படும் கடிதத்தொடர்பு கிடைக்கப்பெற்றதிலிருந்து அல்லது இல்லாதாக்குகைத் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள், அத்தகைய மறுப்புக்கு அல்லது இல்லாதாக்குகைக்கு எதிராகச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) சபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீதான முடிபொன்றைச் செய்யுமுன்னர்,

9 ஆம் பிரிவின்கீழ் சபையினால் அந்நோக்கத்துக்காகத் தாபிக்கப் பட்ட மதியுரைக் குழுவொன்றன் மதியுரையையும் அவதானிப்புக ளையும் பெறலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் சபைக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீது கொடுக்கப்பட்ட அதன் முடிபினால் இன்னலுறும் விண்ணப்பகாரரொருவர், அத்தகைய முடிபு விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(4) இப்பிரிவின்கீழான மேன்முறையீடுகள் தொடர்பாக அரசிய லமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழான விதிகள் ஆக்கப்படும் வரை, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மீளாய்வு என்றவகை யானவொரு விண்ணப்பம் தொடர்பாக அவ்வுறுப்புரையின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள், இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப் படும் ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பிலும் ஏற்புடையன வாதல் வேண்டும்.

நெய்யரிக்கு அப்பாலனவான புதுப்பிக்கப் படற்பாலனவான வலுக் கருத்திட்டங்கள்.

**23.** (1) வேறேதேனும் சட்டத்தில் முரணாகவுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆளெவரும், அதிகாரசபையினால் அதற் கென வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழன்றி, மின்சக்தியைப் பிறப்பித்தற்கானதும் வழங்குதற்கான துமானவொரு நெய்யரிக்கப்பாலான புதுப்பிக்கப்படற்பாலதான வலுக்கருத்திட்டத்தில் ஈடுபடுதலாகாது.

(2) நெய்யரிக்கப்பாலதான வலுக் கருத்திட்டத்தில் ஈடுபடுவதற்கு விரும்புகின்ற எவரேனுமாள், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்து டனும் பின்வரும் ஆவணங்களுடனும் சேர்த்து விதித்துரைக் கப்பட்ட படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அதற்கான விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும் :—

(அ) உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டத்தின் புவியியல் இடத்தின் வரைபடத்தினது பிரதியொன்று ;

(ஆ) பிறப்பிக்கப்படவுள்ள மின்சக்தியின் கொள்ளளவும் அதன் மொத்த மதிப்பிடப்பட்ட செலவும் உட்பட, கருத் திட்டத்தின் சுருக்கமானவொரு விவரணமும் ;

(இ) கடைப்பிடிக்கப்பட்ட உச்சளவினதாக்குகை கட்டளைக்கற் களுட்பட, மொத்த மதிப்பிடப்பட்ட செலவும் நிதிசார் மாதிரியும் ;

(ஈ) போதிய நிதிகள் கிடைக்கக்கூடியவை பற்றிய எண்பிப்பு அல்லது கருத்திட்டத்துக்குத் தேவையான நிதிகள் பெறப்படவுள்ள முறை ;

(உ) கருத்திட்ட அமைவிடம் (அது நீர்மின்சக்திக் கருத்திட்ட மொன்றாகவிருப்பின், ஆற்று அல்லது அருவி முறைமை தொடர்புபட்ட பியர் மற்றும் மின்சக்தி அகம் அல்லது அது காற்று மின்சக்திக் கருத்திட்டமொன் றாகவிருப்பின், காற்று விசையாழி மற்றும் கட்டமைப்பு கள், அது உயிரியற் சேதனக் கருத்திட்டமொன் றாகவிருப்பின், வலு ஆக்கிடம், மின்சக்தி அகம் மற்றும் நீர்வளமூலம், அத்துடன் அது வேறேதேனும் கருத்திட்ட மாகவிருப்பின், வலுமூலவளனுடன் தொடர்புபட்ட நிலைமாற்றுச் செயலிடம்) ; அத்துடன்

(ஊ) பின்வருவனவற்றுடன் சேர்த்து, கருத்திட்டத்தின் விபர மான செயல்படத்தக்க ஆய்வறிக்கை :-

(i) கருத்திட்டத்தின் விவரமானவோர் எந்திரவியல் வடிவமைப்பு ;

(ii) கருத்திட்டத்தின்மூலம் நன்மைபெறுவோர் பற்றிய வொரு சமூக – பொருளாதார அளவீடு ;

(iii) கருத்திட்டத்தின் சாத்தியமான சூழல்சார் விளை வுகள் குறித்து 1990 ஆம் ஆண்டில் 47 ஆம் இலக்க, மத்திய சூழல் அதிகாரசபையிடமிருந் தானவோர் அறிக்கை ;

(iv) கருத்திட்டமானது எம்முறையில் செயற்படுத் தப்படவேண்டுமோ அம்முறைபற்றிய காலவெல் லையையுடையவொரு நடவடிக்கைத் திட்டம்.

(எ) இயைபான மாகாண வலு அமைச்சுடன் “நெய்யரிக்கப் பாலான வலுப் பாவனையாளர்கள் சங்கம்” ஒன்றாகப் பதிவுசெய்யப்படும் நோக்கத்துக்காக, கருத்திட்டத்தின் நன்மைபெறுவோராக வரவுள்ளவர்களினாற் சமர்ப்பிக் கப்பட்ட விண்ணப்பங்கள் ஒவ்வொன்றினதும் பிரதி யொன்று ;

(ஏ) 2002 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மின்சாரச் சீர்திருத் தச் சட்டத்தின்கீழ் பிறப்பித்தல் உரிமமொன்றைப் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்து வர்த்தமானியில் வெளியிடப்பட்ட எந்தக் கட்டளையின்மூலம் விலக்களிப் பொன்று வழங்கப்பட்டதோ அந்தக் கட்டளையின் பிரதியொன்று ;

(ஐ) பந்தி (அ)வில் குறிப்பீடுசெய்யப்பட்ட புவியியல் இடத்தினுள் வாழ்கின்ற அப்பாவனையாளர்களின் வளவுகளுக்குப் பிறப்பிக்கப்பட்ட மின்சக்தியை விநியோகிப்பதற்கு, 2002 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மின்சார சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் விநியோகித்தல் உரிமமொன்றைப் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்து வர்த்தமானியில் வெளியிடப்பட்ட எந்தக் கட்டளையின் மூலம் விலக்களிப்பொன்று வழங்கப்பட்டதோ அந்தக் கட்டளையின் பிரதியொன்று ;

(ஒ) பிறப்பிக்கப்பட்ட மின்சக்தியை விண்ணப்பகாரர் எவ்வாறு விநியோகிப்பதற்கு உட்கருதுகின்றார் என்ப தனை விளக்குகின்ற கூற்றொன்றும், விண்ணப்பகார ரிடமிருந்து மின்சக்தி வழங்கலைப் பெறுவதற்குச் சம்மதித்துள்ள அத்தகைய பாவனையாளர்களின் பெயர்களும், அத்தகைய பாவனையாளர்களின் அந்தந்த வளவுகளுக்குப் பிறப்பிக்கப்பட்ட மின்சக்தியை கொண்டு செல்வதற்காக அத்தகைய வளவுகள் அமைந்துள்ள புவியில் இடப்பரப்பு தொடர்புபட்ட விநியோகித்தல் முறைமை பற்றியவொரு திட்டஞ்சார் படமும் ; அத்து டன்

(ஓ) குழுவுக்குத் தேவைப்படக்கூடிய வேறேதேனும் தகவல்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்ற தன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, பெறப்பட்ட ஆவணங் களுடன் சேர்த்து அத்தகைய விண்ணப்பத்தை அந்நோக்கத் துக்காகப் பேணப்பட்டுவரும் இடாப்பில் உடனடியாகப் பதிவு செய் தல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பகாரருக்குப் பதிவிலக்க மொன்றை வழங்குதலும் வேண்டும்.

நெய்யரிக்கப் பாலான புதுப்பிக்கப் படற்பாலனவான வலுக் கருத்திட்டங் களுக்காக இயைபான ஒருப்பாட்டையும் உறுதிப்படுத் துகையையும் பெறுவதற்கான நடவடிக்கை முறை.

**24.** (1) பணிப்பாளர்—தலைமையதிபதி, 23 ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றைப் பதிவுசெய்வதிலிருந்து முப்பது நாட்களினுள் -

(அ) அத்தகைய கருத்திட்டம் எந்த பிரதேசச் செயலாளர் பிரிவினுள் செயற்படுத்தப்படவுள்ளதோ அந்த பிரதேசச் செயலாளர் பிரிவின் இயைபான மாகாண அமைச்சினதும் பிரதேச செயலாளரினதும் ஒருப் பாட்டைப் பெறுதல் வேண்டும்;

(ஆ) கருத்திட்டத்தின் அத்தகைய பூர்வாங்க நுனித்தாராய்வை நிறைவேற்றுதல் வேண்டுமென்பதுடன், குறிப்பிட்ட இடத்துக்கு அடுத்த ஐந்தாண்டுகளுக்கு நெய்யரி விசாலிப்பொன்று திட்டமிடப்படவில்லையென, இடப் பரப்பில் மின்சக்தி விநியோகித்தலுக்குப் பொறுப்பாக வுள்ள உருவகத்திடமிருந்து உறுதிப்படுத்துகையைப் பெறுதலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, குழுவிடம் அதனால் கவனத்துட்கொள்ளப்படுவதற்காக, விண்ணப்பத்தை, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரினால் பெறப்பட்ட ஒருப்பாடு உறுதிப் படுத்துகைதாரரி, நிர்மாணத்துக்கான அமைவிடம், கிடைக்கக் கூடியமை கருத்திட்டத்தின் தொழினுட்ப அம்சம் மற்றும் விண் ணப்பத்தின் தொழினுட்ப, நிதிசார் ஆற்றல் என்பன மீதான அவரது அவதானிப்பு என்பவற்றுடன் சேர்த்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) குழுவானது, (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின்மேல் இயன்றளவு விரைவாக, ஆனால் அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் முடிவொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன், அதற்கான காரணங்களைக் கொடுத்து, அதன் முடிவைப் பணிப்பாளர்—தலைமையதிபதிக்கு அறிவித்தலும் வேண்டும். பணிப்பாளர்—தலைமையதிபதி குழுவின் முடிபை 23 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் பேணப்பட்ட இடாப்பில் பதிதல் வேண்டும்.

குழுவின் முடிபு விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்படுதல்.

**25.** பணிப்பாளர்—தலைமையதிபதி 24 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் குழுவினால் செய்யப்பட்ட முடிபு கிடைக்கப்பெற்றதன்மீது -

(அ) குழுவானது விண்ணப்பத்தை அங்கீகரிக்குமிடத்து விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைய, விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான அனுமதிப்பத்திரமொன்றை உடனடியாக விண்ணப்பகாரருக்கு வழங்குதல் வேண்டும் ; அல்லது

(ஆ) குழுவானது விண்ணப்பத்தை அங்கீகரிக்காதவிடத்து, அதற்கான காரணங்களைக்கூறி அத்தகைய மறுப்புப் பற்றி விண்ணப்பகாரருக்கு உடனடியாகத் தெரிவித்தல் வேண்டும்.

அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடிக் காலப்பகுதியும் செலுத்தப்பட வேண்டிய இறுப்பனவுகளும்.

**26.** (1) இச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான விண்ணப்பமொன்று அங்கீகரிக்கப்பட்டதன்கீழ் ஓர் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலப்பகுதி, கருத்திட்டத்தின் தன்மையையும் பிறப்பிக்கப்பட்ட மின்சக்தியின் கொள்ளளவையும் கருத்திற்கொண்டு, விதித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

(2) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலப்பகுதியின்போது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடிய

வாறான அத்தகைய இறுப்பனவை வருடாந்தம் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான இறுப்பனவொன்றாகச் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் 46 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட வலு நிதியத்துக்கு அதிகாரசபையினால் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

அனுமதிப்பத்திர மொன்றை இல்லா தாக்குதல்.

**27.** (1) இருபத்தைந்தாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று, அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் -

(அ) அத்தகைய அனுமதிப்பத்திரம் எக்கருத்திட்டம் தொடர்பில் வழங்கப்பட்டதோ அக்கருத்திட்டத்தைத் தொடங்குவதற்கும் அது வழங்கப்பட்டதிலிருந்து இரண்டாண்டுகளினுள் மின்சக்திப் பிறப்பித்தலை ஆரம்பிப்பதற்கும் தவறுமிடத்து ; அல்லது

(ஆ) அத்தகைய அனுமதிப்பத்திரம் எந்நியதி நிபந்தனைகளுக்கமைய வழங்கப்பட்டதோ அந்நியதி நிபந்தனைகளுக்கு முரணாகச் செயலாற்றுமிடத்து அல்லது அவற்றுக்கு இசைந்தொழுகுவதற்குத் தவறுமிடத்து,

சபையின் அங்கீகாரத்துடன் பணிப்பாளர்—தலைமையதிபதியினால் இல்லாதாக்கப்படலாம்.

(2) சபையானது, வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் இல்லாதாக்குகையை அது அங்கீகரிக்குமுன்னர், சம்பந்தப்பட்ட அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு, அனுமதிப்பத்திரம் ஏன் இல்லாதாக்கப்படுதலாகாதெனக் காரணங்காட்டுவதற்கான வாய்ப்பொன்றையளிக்கலாமென்பதுடன் அது தோதானதும் நியாயமானதுமெனக் கருதுமிடத்து, அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எக்காலப்பகுதியினுள் விடயத்துக்கேற்ப,

அனுமதிப்பத்திரத்தின் ஏதேனும் தேவைப்பாட்டுக்கு அல்லது எவையேனும் நியதிநிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதற்கு அல்லது அனுமதிப்பத்திரத்தின் உத்தேசிக்கப்பட்ட இல்லாதாக்குகையை விளைவித்துள்ள, விடயத்துக்கேற்ப, ஏதேனும் நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு முரணாகச் செயலாற்றுவதனைத் தவிர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்படக்கூடுமோ அக்காலப் பகுதியை வழங்கலாம்.

**28.** (1) (அ) நெய்யரிக்கப்பாலான புதுப்பிக்கப்படற்பாலதான வலுக் கருத்திட்டத்துக்கான அனுமதிப் பத்திரமொன்றைக் குழு வழங்க மறுக்கின்றமையினால் ; அல்லது

(ஆ) 27 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமொன்றை இல்லாதாக்குகின்றமையினால்,

இன்னலுறுகின்ற எவரேனும் ஆள் அத்தகைய முடிவுக்கெதிராகச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீது சபையின் முடிவினால் இன்னலுறுகின்ற எவரேனும் ஆளொருவர், அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அத்தகைய முடிவுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம் ; அதன்மீது அவரது முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

அபிவிருத்தியாளர் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் உரிய விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்தல்.

**29.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் எந்த அபிவிருத்தியாளருக்கு அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகின்றதோ அந்த ஒவ்வோர் அபிவிருத்தியாளரும் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரும், உரிய விழிப்புக்கவனத்துடனும் மிக்க கவனத்துடனும், கருத்திட்டத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட புதுப்பிக்கப் படற்பாலதான வலு மூலவளனைப் பயன்படுத்துவதற்கு அவசியமான எல்லா வழிமுறைகளையும் எடுப்பது அவரது கடமையாதல் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்ப, அபிவிருத்தியாளர் ஒருவரின் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒருவரின் அசட்டை அல்லது உரிய விழிப்புக்கவனமின்மை காரணமாக ஏதேனும் கருத் திட்டத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட புதுப்பிக்கப்படற்பாலதான வலு மூலவளம் ஒன்றுக்கு ஏதேனும் சேதம் விளைவிக்கப் படுமிடத்து, அத்தகைய அபிவிருத்தியாளர் அல்லது அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச் சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை நட்டஈடாக அதிகாரசபைக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண் டும்.

## பாகம் VI

### கருத்திட்டங்களுக்காக அசைவற்ற ஆதனங்களைக் கொள்ளுத லும் குத்தகைக்கு எடுத்தலும்

*காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் அதிகார சபைக்காகக் காணியைக் கட்டாயமாகக் கொள்ளுதல்.*

**30.** (1) பன்னிரெண்டாம் பிரிவின்கீழ் அபிவிருத்தி இடப்பரப் பொன்றாக வெளிப்படுத்தப்பட்ட ஓர் இடப்பரப்பில் அமைந் துள்ள ஏதேனும் காணி அல்லது காணியொன்றிலான அக்கறை, அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்துக்காக அதிகாரசபை யினால் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது, 460 ஆம் அத்தியாயமான காணி கொள்ளுதற் சட்டத்தின் நோக்கங்களுக் காக, ஒரு பகிரங்க நோக்கமாகக் கருதப்படுதல் வேண்டுமென்ப துடன், அக்காணி அல்லது அதன்கண்ணுள்ள அக்கறை, அதிகாரசபைக்காக அரசாங்கத்தினால் காணிகொள்ளுதற் சட்டத் தின்கீழ் அதற்கிணங்கக் கொள்ளவும்படலாம் ; அத்துடன் அச்சட் டத்தின் ஏற்பாடுகள், இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் வேறுவகை யாக ஏற்பாடு செய்யப்படுவதனைத் தவிர, அக்காணியை அல்லது அதன்கண்ணுள்ள அக்கறையைக்கொள்ளும் நோக்கங்களுக்காக ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) இடப்பரப்பொன்றை அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்துகின்ற தேதியிலிருந்து தொடங்குகின்ற ஐந்தாண்டுக் காலப்பகுதியினுள்ளான ஏதேனும் நேரத்தில் காணிகொள்ளுதற் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக அக்காணியை

அல்லது அதன்கண்ணுள்ள அக்கறையைக் கொள்வதற்கான உட்கருத்து பற்றி பகிரங்க அறிவித்தல் வெளியிடப்படுமிடத்தான (1) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் கொள்ளுதலின் விடயத்தில், காணிகொள்ளுதற் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அக்காணி அல்லது அதன் கண்ணுள்ள அக்கறை தொடர்பில் செலுத்தப்படவேண்டிய நட்டஈட்டுத் தொகையைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக அக்காணியின் அல்லது அதன்கண்ணுள்ள அக்கறையின் சந்தைப்பெறுமதியானது, அத்தகைய இடப்பரப்பை அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்துகின்ற தேதியன்று அக்காணி அல்லது அதன்கண்ணுள்ள அக்கறை கொண்டதாகவிருந்திருக்கக்கூடியதும், சந்தைப் பெறுமதிக்கும் பின்வருவதற்கும் இடையிலான வித்தியாசத்தின் ஐம்பது சதவீ தத்தினால் அதிகரிக்கப்பட்டதுமான அச்சந்தைப் பெறுமதியாகக் கருதப்படுதல் வேண்டும் :—

(அ) காணிகொள்ளுதற் சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தின்கீழ் எந்தக் காணி அல்லது அதன்கண் ணுள்ள அக்கறை தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப் பட்டிருக்கவில்லையோ அந்த ஏதேனும் காணியின் அல்லது அதன்கண்ணுள்ள அக்கறையின் விடயத்தில், அச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலுள்ளவா றாகக் காணியின் அல்லது அதன்கண்ணுள்ள அக்கறை யின் சந்தைப் பெறுமதி ; அல்லது

(ஆ) காணிகொள்ளுதற் சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தின்கீழ் எந்தக் காணி அல்லது அதன் கண்ணுள்ள அக்கறை தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப்படுள்ளதோ அந்த ஏதேனும் காணியின் அல்லது அதன் கண்ணுள்ள அக்கறையின் விடயத்தில், அத்தகைய கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியன்றுள்ளவாறாகக் காணியின் அல்லது அதன்கண்ணுள்ள அக்கறையின் சந்தைப் பெறுமதி.

அரச காணி அதிகாரசபைக்குக் கிடைக்கக் கூடியதாதல்.

***31.*** அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனம் அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்துக்காகத் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கானது, (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் எந்நோக்கத்துக்காக ஆதனத்தின் விசேட மானியக்கொடை அல்லது குத்தகை ஒன்று செய்யப்படலாமோ அந்நோக்கமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், அதிகாரசபைக்குச் செய்யப்பட்ட அத்தகைய ஆதனத்தின் விசேட மானியக்கொடை அல்லது குத்தகை ஒன்றுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

அதிகாரசபையினால் வைத்திருக் கப்பட்ட காணியின் அல்லது காணியிலுள்ள அக்கறையின் குத்தகை.

***32.*** (1) அதிகாரசபையானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன், விடயத்துக்கேற்ப, அபிவிருத்தியாளர் ஒருவருக்கு அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒருவருக்கு, குத்தகை யென்றவகையாக, குத்தகை வாடகையாகச் செலுத்தப்படவேண்டிய தொகையுட்படவும், குறிப்பாக, ஆனால் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி, குத்தகை உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு இணங்கியொழுகத் தவறும் பட்சத்தில், அல்லது அத்தகைய குத்தகை உடன்படிக்கையின்கீழ் அதிகாரசபைக்கு வருமதியாகவுள்ள ஏதேனும் பணம் அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் காலப்பகுதிக்குச் செலுத்தப்படாதுள்ள பட்சத்தில் அத்தகைய உடன்படிக்கை இல்லாதாக்கப்படலாம் அல்லது திருத்தப்படலாம் என்ற பொருள்பட்டவொரு நிபந்தனையுட்படவும், அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, இச்சட்டத்தின் (V) ஆம் பாகத்தின்கீழ் எக்கருத்திட்டத்துக்காக அனுமதிப்பத்திரமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அக்கருத்திட்டம் எதனதும் நோக்கத்துக்காக அதிகாரசபையினால் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் காணியை அல்லது காணியிலுள்ள அக்கறையை அளிக்கலாம்.

(2) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்திலுள்ளதெதுவும், அதிகாரசபையினால் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் அரச காணியின் குத்தகையொன்றை அளிப்பதனைப் பாதித்தலோ அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதலோ அல்லது பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான குத்தகை உடன்படிக்கையொன்றின்கீழ் ஏதேனும் காணி அல்லது ஏதேனும் காணியிலான அக்கறை எந்த அபிவிருத்தியாளருக்கு அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்டதோ அந்த அபிவிருத்தியாளருக்கு அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இல்லாதொழிக்கப்படும் பட்சத்தில், குத்தகை உடன்படிக்கையில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் அத்தகைய அனுமதிப்பத்திரம் இல்லாதொழிக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*குத்தகை உடன்படிக்கையொன்றை இல்லாதொழித்தல் தொடர்பில் வழக்கெதுவும் இருத்தலாகாது.*

**33.** வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும் 32 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் குத்தகை உடன்படிக்கையொன்றை இல்லாதொழித்தல் தொடர்பில் அதிகாரசபைக்கு அல்லது அத்தகைய அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு எதிராக வழக்கெதுவும் இருத்தலாகாது.

*அமைவிடத்தில் அல்லது தலத்திலிருந்து ஆதனத்தை அப்புறப்படுத்துதல்.*

**34.** (1) இச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் அதிகாரசபையால் ஏதேனும் காணி விடயத்திற்கேற்ப எந்த அபிவிருத்தியாளருக்கு அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதோ அந்த அபிவிருத்தியாளர் ஒருவர் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் அத்தகைய அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலப்பகுதி முடிவுற்ற ஆறு மாதங்களுள் அல்லது அனுமதிப்பத்திரம் இல்லாதொழிக்கப்படுமிடத்து அத்தகைய இல்லாதொழித்தலின் தேதியிலிருந்து ஆறு மாதங்களுள் அத்தகைய அபிவிருத்தியாளருக்கு அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் சொந்தமானவையும் காணியுடன் பொருத்தப்பட்டுள்ளவையுமான எவையேனும் இணைப்புகள் உட்பட எல்லா அசைவுள்ள ஆதனத்தையும் அமைவிடத்திலிருந்து அல்லது தலத்திலிருந்து விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் அப்புறப்படுத்துமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) விடயத்திற்கேற்ப அபிவிருத்தியாளர் அல்லது அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைவிடத்திலிருந்து அல்லது தலத்திலிருந்து அவரது ஆதனத்தை அப்புறப் படுத்துகையில் அத்தகைய அபிவிருத்தியாளரின் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் கவனக்குறைவால் புதுப்பிக்கப்படற்பாலதான வலுவின் மூலவளத்திற்கு அல்லது குத்தகைக்கு விடப்பட்ட காணிக்கு ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் சேதத்திற்கு அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நட்டஈட்டை அதிகாரசபைக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

## பாகம் VII

### வலுவின் சிக்கனம் மற்றும் பேணிக்காத்தல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள்

**35.** (1) சபையானது எல்லாப் பாவனையாளர் துறைகளிலும் வலுவின் பயன்பாட்டில் வலுவைப் பேணிக்காப்பதற்கும், வலுவைச் சேமிப்பதில் முறை வழிப்படுத்தல், மாற்றுதல், ஏற்றிச் செல்லுதல், களஞ்சியப் படுத்துதல், கூட்டுப்பிறப்பாக்கம் மற்றும் வெப்ப மீட்புத் தொழில் நுட்பம் என்பவற்றை மேம்படுத்துவதற்குமான வழிமுறைகளை கடைப்பிடிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பானதாதல் வேண்டும். *வலுவின் சிக்கனம் மற்றும் பேணிக் காத்தல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள்.*

(2) சபையானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றும் நோக்கத்திற்கு ,—

(அ) எல்லாப் பாவனையாளர் துறைகளாலும் அவற்றின் பல்வேறு செயற்பாடுகளில் பயன்படுத்தப்படும் வலுவின் வீண் விரயத்தைக் தடுப்பதற்கு அவற்றால் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய கொள்கை வழிமுறைகளை இனம் காணுதலும் பகுப்பாய்வு செய்தலும் அபிவிருத்திசெய்தலும் விதந்துரைத்தலும் வேண்டும் ;

(ஆ) வலுவின் சிக்கனம், தேவை முகாமைத்துவம் அல்லது பேணிக்காத்தலில் கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் பாடநெறிகளையும் ஒழுங்குசெய்வதன்மூலம் வலுவின் சிக்கனம் மற்றும் வலுவைப் பேணிக்காத்தல்

தொடர்பான கொள்கை வழிமுறைகளை ஊக்குவித்தலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளித்தலும்;

(இ) வலுத் தேவை முகாமைத்துவம் மற்றும் பேணிக்காத்தல் தொடர்பில் பொது மக்களுக்கு அறிவூட்டுதலும் அவர்களுக்குத் தகவல் வழங்குதலும் ;

(ஈ) வலுவின் பகுத்தறிவுபூர்வமான பாவனையை ஊக்குவிப்பதும் இலங்கையில் புதுப்பிக்கப்படற்பாலதல்லாத வலு மூலவளங்களின் பாவனையைக் குறைப்பதுமான வலுத் தேவை முகாமைத்துவத்தின் எவையேனும் அல்லது எல்லா அம்சங்களையும் மேம்படுத்துதல் ;

(உ) வலுவினைத் திறமையுடன் சேமித்தல், முறைவழிப் படுத்துதல், மாற்றுதல், ஏற்றிச்செல்லுதல், களஞ்சியப் படுத்துதல், வலுவின் பயன்பாடு என்பவற்றில் திறனை மேம்படுத்துவதற்குக் கிடைத்தகு தொழில்நுட்பவியில் களை இனம் காணுதலும் அத்தகைய தொழில்நுட்ப வியல்களை நடைமுறைப்படுத்துவதனை வசதிப்படுத்து தலும் ;

(ஊ) உபகரணங்களுக்கும் உபாயங்களுக்கும் வலுச் சுட்டுத் துண்டிற்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்துதலும் உச்சமட்ட அளவுகளைத் தாபித்தலும் ;

(எ) வலுவின் சிக்கனப் பாவனைக்கும் கட்டிடங்களில் வலுவின் வீண் விரயத்தைக் குறைப்பதற்கும் நியமங்கள், பொது நெறிகளையும் கோவைகளையும் அளவீட்டையும் சரிபார்த்தல் ஆய்வுக் குறிப்புகளையும் கட்டிடக் கோவைகளையும் குறித்துரைத்தலும் நடை முறைப்படுத்துதலும்;

(ஏ) வலுச் சிக்கனம், பேணிக்காத்தல் அத்துடன் தேவை முகாமைத்துவம் என்பவற்றின் குறித்துரைக்கப்பட்ட அம்சங்கள் தொடர்பில் ஆய்வையும் கணிப்பீடுகளையும் புலனாய்வுகளையும் தொடக்கிவைத்தலும் நடாத்துதலும் ஒருங்கிணைத்தலும்.

வலுச்சிக்கன மேம்பாட்டிற்கான உச்ச மட்ட அளவு.

**36.** (1) சபையானது, எல்லா வலுபாவனையாளர்களாலும் இணங்கியொழுகப்பட வேண்டிய குறித்த வலு சிக்கன மேம்பாட்டுக் கான உச்ச மட்ட அளவுகளை அது தொடர்பில் ஆக்கப்படும் ஒழுங்கு விதிகள் மூலம் காலத்துக்குக் காலம் தாபிக்கலாம்.

(2) சபையானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட உச்ச மட்ட அளவுகள் இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக அவசியமெனக் கருதுமிடத்து —

(அ) எவையேனும் வளவுகளில், வளாகத்தில் அல்லது கட்டிடத்தில் உட்புகுவதற்கும் தகவல் திரட்டுவதற்கும் தகவலை சரிபார்ப்பதற்கும் அத்துடன் வேறு எவையே னும் புலனாய்வுகளை நடாத்துவதற்கும் ;

(ஆ) வலுவின் பயன்பாடு, உற்பத்தி, பெறுகை அத்துடன் விற்பனை தொடர்பில் தகவல் கொடுத்துதவுமாறு எவரேனும் ஆளைப் பணிப்பதற்கும் ;

(இ) கட்டிடங்களிலும் கைத்தொழில் வளவுகளிலும் வலுவின் பாவனையைக் கண்காணிப்பதற்கும் தரை வாகனங்க ளினதும் கப்பல்களினதும் வானூர்திகளினதும் வலுச் சிக்கனத்தை இயைபான முகவராண்மைகளுடன் இணைந்து கண்காணிப்பதற்கும் ;

(ஈ) இயைபான முகவராண்மைகளுடன் இணைந்து வலுப்பாவனை வரையறைகளையும் உபகரணங்களின் வலுச் செயற்பாட்டு நியமங்களையும் குறித்துரைப்ப தற்கும் அத்துடன் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விவரங்களை அத்தகைய முறையில் உபகரணங்களுடன் பொருத்தப்பட்டுள்ள சுட்டுத்துண்டு களில் வெளிக்காட்டுமாறு பணிப்பதற்கும் ;

(உ) பந்தி (ஈ) என்பதின்கீழ் விதித்துரைக்கப்பட்ட விவரக் கூற்றுக்களை ஒத்திராத உபகரணங்களின் உற்பத்தியை, இறக்குமதியை, விற்பனையை அல்லது கொள்வனவைக் கட்டுப்படுத்துவதற்கும் ;

(ஊ) வலுப் பாவனையில் மட்டக்குறிகளைத் தாபிப்பதற்கும் மீளாய்வு செய்வதற்கும் ; அத்துடன் உளதாம் மற்றும் உத்தேசிக்கப்பட்ட கட்டிடங்களுக்கும் கைத்தொழில் வளவுகளுக்கும், தரை வாகனங்களுக்கும், கப்பல்களுக்கும் வானூர்திகளுக்கும் இயைபான முகவராண்மைகளுடன் இணைந்து வரையறைகளையும் நடைமுறைக் கோவைகளையும் வலுவுக்கிடுவதற்கும் ;

(எ) வலுவின் சிக்கனமானதும் பகுத்தறிவுபூர்வமானதுமான பாவனை மற்றும் வலுவை பேணிக்காத்தல் பற்றிய கல்வி சார்ந்த விடயங்களை அபிவிருத்தி செய்வதற்கும் கல்விப் பாடவிதானங்களை விதந்துரைப்பதற்கும்,

தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

ஏற்கப்படற்பாலதான வரையறைக்கு அப்பால் வலுவின் பாவனை.

**37.** (1) எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் ஆட்களின் பிரிவு (ஏதேனும் பகிரங்கக் குழு உட்பட) அவரவரின் வளவுகளில் அல்லது நிறுவுகைகளில் இச்சட்டத்தின் 36 ஆம் பிரிவின்கீழ் சபையினால் தாபிக்கப்பட்ட உச்சமட்ட அளவுகளுக்குமேலாக வலுவைப் பாவனை செய்கின்றார் அல்லது பாவனை செய்கின்றது என சபை கருதுமிடத்து, ஒத்திசைவாக்கப்பட்ட வலுக் கணக்காய்வாளரொருவரினால் கொடுக்கப்பட்ட விரிவான கணக்காய்வறிக்கையொன்றையும், வலுப் பாவனையை ஏற்கப்படற்பாலதான மட்ட அளவுகளுக்குக் குறைப்பதற்காக விடயத்திற்கேற்ப அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களின் பிரிவினால் எடுக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட திருத்த வழிமுறைகள் பற்றிய விரிவான செயற்றிட்டமொன்றை சபைக்குச் சமர்ப்பிக்குமாறு அத்தகைய ஆள் அல்லது ஆட்களின் பிரிவு கோரப்படலாம்.

(2) சபையால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவ்வாறு செய்யுமாறு கோரப்படும்போது, விரிவான கணக்காய்வறிக்கையொன்றையும் விரிவான செயற்றிட்டமொன்றையும் சமர்ப்பிக்கவும் அத்துடன் அத்தகைய திட்டம் சபையால் அங்கீகரிக்கப்படுவதன்மீது அதனை நடைமுறைப்படுத்தவும் தவறுதல் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் விரிவான செயற்பாட்டுத் திட்டமொன்றைச் சபையிடம் சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டுள்ள எவரேனுமாள் அல்லது பிரிவினரான ஆட்கள், அத்தகைய திட்டத்தைச் செயற்படுத்தும்போது, நியாயமானவோர் ஆளின் எதிர்பார்ப்புக்கு அப்பாற்பட்ட எவையேனும் செலவுகளை உறுமிடத்து, அத்தகைய ஆள் அல்லது பிரிவினரான ஆட்கள், சம்பந்தப்பட்ட ஆளுடான

அல்லது பிரிவினரான ஆட்களுடனான உடன்பாட்டுடன் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டிய நியாயமான தொகையொன்று நட்டஈடாகச் செலுத்தப்படுவதற்கு உரித்துடையோராதல் வேண்டும்.

வலு முகாமையாளர்கள் வலுக்கணக் காய்வாளர்கள் முதலானோரின் ஒத்திசைவு.

**38.** (1) சபையானது விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தகைமைகளையுடைய ஆட்களை —

(அ) சிக்கனமான வலு முகாமைத்துவம் தொடர்பான நடைமுறைகளை ஊக்குவிப்பதில் துணைபுரிய வேண்டியவர்களான வலு முகாமையாளர்களாகவும் ;

(ஆ) வலுக் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்குத் தகைமை பெற்றிருக்கவேண்டியவர்களான வலுக் கணக்காய்வாளர்களாகவும் ; அத்துடன்

(இ) வலுச் சேவை வழங்குநர்களாகவும்,

இருப்பதற்கென ஆட்களை நியமித்தலும் பதவி வரிசைப்படுத்துதலும் அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களுக்கு ஒத்திசைவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சான்றிதழொன்றை வழங்கப்பெற்ற ஒவ்வோராளும் காலத்துக்குக்காலம் சபையால் நடாத்தப்படும் அத்தகைய பரீட்சைகளுக்கு அமருமாறு தேவைப்படுத்தப்படுதலும் அத்துடன் சபை அவ்வாறு தேவைப்படுத்துமிடத்து சபையால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடைக்காலங்களில் செயற்பாட்டு மீளாய்வுகளைச் சமர்ப்பித்தலும் வேண்டும். சபை அதனால் நியமிக்கப்பட்டவர்களான ஒத்திசைவாக்கப்பட்ட எல்லா வலு முகாமையாளர்களினதும் வலுக் கணக்காய்வாளர்களினதும் வலுச் சேவை வழங்குவோர்களினதும் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

வலுக்கணக் காய்வாளர்களின் நடத்தை.

**39.** (1) சபையானது காலத்துக்குக்காலம் அதனால் ஆக்கப்படும் விதிகளின் மூலம் —

(அ) தத்தமது நிறுவுகைகளில் அல்லது வளவுகளில் வலுக் கணக்காய்வொன்றை மேற்கொள்ளுவிக்குமாறு தேவைப்படுத்தப்படவேண்டிய பகிரங்கக் குழுமங்கள் உட்பட ஆட்களையும் அல்லது ஆட்களின் குழுமங்களையும் ; அத்துடன்

(ஆ) வலுக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட முறைகளையும் காலப் பகுதிகளையும்,

குறித்துரைத்தல் வேண்டும்.

(2) வலுக் கணக்காய்வொன்று ஒத்திசைவாக்கப்பட்ட வலுக் கணக்காய்வாளர் ஒருவரால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் ; அத்தகைய கணக்காய்வாளர் அவரால் மேற்கொள்ளப்பட்ட வலுக்கணக்காய்வின் பெறுபேறுபற்றி சபைக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*கிராமிய வலுச் சேவையை ஒப்படைத்தல்.*

**40.** சபையானது –

(அ) நவீன, வர்த்தகரீதியிலான வலுச் சேவைகளுக்கு அணுக்கம் இல்லாத அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அணுக்கத்தையுடைய நாட்டின் கிராமிய மற்றும் நெடுந் தொலை இடப்பரப்புகளுக்கு கட்டுப்படியாகக்கூடிய வலுச் சேவைகளை கிடைக்கச் செய்வதன் மூலம் கிராமிய குடிசனத்தின் அடிப்படை வீட்டு வலுத் தேவைகளை நிறைவு செய்வதற்கும் ;

(ஆ) சேவிக்கப்படாத இடப்பரப்புகளையும் அவற்றின் வலுத் தேவையையும் கிடைக்கவுள்ள வளங்களையும் இனம் காண்பதன் மூலமும் பொருத்தமான தொழில்நுட்பவியல்களை ஊக்குவிப்பதன் மூலமும் நாட்டின் கிராமிய மற்றும் நெடுந்தூர இடப்பரப்புகளுக்கு வலுச் சேவைகளை விநியோகிப்பதற்கு நீண்ட தவணைத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கும் ;

(இ) கிராமிய வலுக் கருத்திட்ட அபிவிருத்தி மீது இயைபான அரச முகவராண்மைகளுடன் ஒருங்கிணைந்து வழிகாட்டிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் கிராமிய வலு விநியோகத்தில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு உசிதமான சுற்றாடல் ஒன்றை உருவாக்குவதற்கும், அவற்றை உத்தேச முதலீட்டாளர்களுக்குப் பரப்புவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

வலுக் கொள்கை அபிவிருத்தியும் தகவல் முகாமைத்துவமும்.

**41.** சபையானது பாதுகாப்பையும் நம்பகத் தன்மையையும் ஊக்குவிப்பதற்கும் இலங்கையினுள் வலு விநியோகத்தினுடைய செலவின் பயனுறுதியை உறுதிப்படுத்துவதற்கும் பொறுப்புடையதாயிருத்தல் வேண்டும் அந்நோக்கத்திற்காக —

(அ) வலுத்துறையின் செயற்பாட்டை ஆராய்தலும், நிறுவனம் சார்ந்த மற்றும் உட்துறை சார்ந்த திட்டங்களை மீளாய்வு செய்தலும், ஒருங்கிணைத்தலும், கொள்கைப் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதலும் தேசிய வலுக்கொள்கைகளுடனும், செயல்நுணுக்கங்களுடனும் இணங்கியொழுகுவதனை மீளாய்வு செய்தலும், பொதுவில் வலுத்துறை மீதும் மேலும் குறிப்பாக புதுப்பிக்கப்படற்பாலதான வலு வளங்கள் மற்றும் வலுச் சிக்கனம் என்பன மீதும் அமைச்சருக்குக் கொள்கை விதப்புரைகளைச் செய்தலும் ;

(ஆ) குடிசன மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து மதிப்பீடுகளையும் புலனாய்வுகளையும் மேற்கொள்ளுதலும், தரவுகளைச் சேர்த்துக் கோவையிடுதலும் பொதுவில் வலுத்துறை தொடர்பாகவும் மேலும் குறிப்பாக வலுவளங்கள், மாற்றம், வழங்கல், பயன்பாடு, பேணிக்காத்தல் மற்றும் பொருளியல் என்பன தொடர்பாகவும் தேசிய வலு நிலுவை அறிக்கைகளையும் வேறு ஆவணங்களையும் வெளியிடுதலும் ;

(இ) கொள்கை வழிமுறைகளை இனம் காணுதலும், விலை நிர்ணயக் கொள்கைகள், வரியிறுப்பனவு, நிறுவக ஏற்பாடுகள் உட்பட நிதிசார்ந்த ஊக்குவிப்புகள், ஊக்குவிப்பின்மை என்பன தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட கொள்கை வழிமுறைகளை அமைச்சருக்கும் ஏனைய இயைபான முகவராண்மைகளுக்கும் விதந்துரைத்தல் ;

(ஈ) வலு வளங்கள், ஆராய்ச்சி, ஒதுக்கீடுகள், மாற்றும் வசதிகள், மாற்றும் மட்டங்கள், களஞ்சிய வசதிகள், களஞ்சிய மட்டங்கள், அனுப்புகை மற்றும் விநியோக முறைகள், விற்பனைகள், வாடிக்கையாளர்கள், செலவு, விலைகள், விற்பனையிலிருந்தான வருமானம், நட்டங்கள், ஊழியர்கள், வலுத் தொழிலில் ஈடுபட்டுள்ள

அல்லது வலுப்பெறுமதிகயைக் கொண்டுள்ள வளங்கள் மீது நியாயாதிக்கம் கொண்டிருக்கும் ஏதேனும் நிறுவனத்தின், கம்பெனியின் அல்லது தனியாளின் திட்டங்களின் அபிவிருத்தி என்பன தொடர்பான தகவலைப் பெறுதலும் ; அத்துடன்

(உ) வாய்ப்புள்ள அல்லது உளதாம் வலு வழங்கல் வசதிக ளையும் அவற்றின் பயன்பாடு மற்றும் பாவனை என்ப வற்றையும் பரிசீலனை செய்தலும் அவற்றைப் பற்றிய தகவலைப் பெறுதலும் வேண்டும்.

வலுப்பாவனை பற்றிய ஆண்டறிக்கை.

**42.** (1) சபையானது முற்போந்த ஆண்டின்போது இலங்கையில் வலுத்துறையின் செயற்பாடு பற்றிய அறிக்கையொன்றை ஆண்டுதோறும் அமைச்சருக்குச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத் தப்படுதல் வேண்டும். அமைச்சர் அத்தகைய அறிக்கையை பாராளுமன்றத்தின் அதன் பரிசீலனைக்கென சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) சபை, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் ஆண்டறிக்கையைத் தயாரிக்கையில் 37 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆட்களின் சேவைகளைப் பெறுதல் வேண்டும்.

## பாகம் VIII

### நிதி

அதிகாரசபையின் மூலதனம்.

**43.** அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம் ஐந்நூறு ரூபா மில்லியன் ஆதல் வேண்டும். இது திரட்டு நிதியத்திலிருந்து நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந் தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்த கைய தவணைக் கொடுப்பனவுகளில் செலுத்தப்படுதல் வேண்டும்.

அதிகாரசபையின் நிதியம்.

**44.** (1) அதிகாரசபை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத் தல் வேண்டும். அதிகாரசபையின் நிதியத்திற்கு —

(அ) அதிகாரசபையின் ஆரம்ப மூலதனமாகப் பெறப்பட்ட வையும் ;

(ஆ) அதிகாரசபையின் பாவனைக்கென பாராளுமன்றத் தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்பட்டவையும் ;

(இ) இச்சட்டத்தின்கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற் கென விதிக்கப்பட்ட கட்டணங்கள் என்ற வகையில் அதிகாரசபையால் பெறப்பட்டவையும் ; அத்துடன்

(ஈ) இலங்கையிலாயினும்சரி, வெளியிலாயினும்சரி எத்தன்மையதுமான எவையேனும் மூலங்களிலிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியங்கள் என்ற வகையில் அதிகாரசபையால் பெறப்பட்டவையும் ; அத்துடன்

(உ) அதிகாரசபையால் 32 ஆம் பிரிவின்கீழ் குத்தகை வாடகைகள் என்ற வகையில் பெறப்பட்டவையுமான,

அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையால் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் உறப்பட்ட செலவுகளை ஈடுசெய்வதற்குத் தேவையான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*பழைமையடைந்த எரிபொருள் உற்பத்திகள்மீது தீர்வை விதிப்பனவு.*

**45.** (1) இறக்குமதிசெய்யப்பட்ட பழைமையடைந்த எல்லா இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் உற்பத்திகள்மீதும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் காலத்துக்குக்காலம் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய வீதங்களின்படி கணிப்பிடப்பட்ட தீர்வையொன்று அறவிடப்படுதலும் விதிப்பனவு செய்யப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தீர்வையொன்றாக சுமத்தப்பட்ட தொகை, அதேபோன்று ஆக்கப்படும் கட்டளையால் வேறுபடுத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) இப்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப்படு

தலும் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் கட்டளை அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதற்கு முன் அதன்கீழ் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாகுந் தன்மைக்குப் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவானது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஒரு பாகமாகப் பயனுறுதல் வேண்டும் என்பதுடன் அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் அறவிடப்பட்ட தீர்வையின் வருவாய்கள் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியால் மாதாந்தம் இச்சட்டத்தின் 46 ஆம் பிரிவால் தாபிக்கப்பட்ட வலு நிதியத்தின் வரவுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் விதிப்பனவு செய்யப்பட்ட தீர்வை எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் விதிப்பனவு செய்யப்பட்ட ஏதேனும் இறக்குமதித் தீர்வைக்கு அல்லது வேறு ஏதேனும் இறுப்பனவுகளுக்கு மேலதிகமானதாதல் வேண்டும்.

இலங்கை நிலைபெறுதகு நிதியம்.

**46.** (1) "இலங்கை வலு நிதியம்" என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இச்சட்டத்தில் "வலு நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.)

(2) வலு நிதியத்துக்குப் பின்வருவன வரவு வைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டிய ஆரம்ப மானியமொன்றாகிய ஐந்நூறு மில்லியன் ரூபா ;

(ஆ) 45 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தீர்வையின் வருவாய்கள் ;

(இ) இலங்கையின் கரியச் சொத்தை முகாமை செய்வதற்காக அபிவிருத்தியாளரிடமிருந்து அறிவிடப்படற்பாலனவான கட்டணங்கள் ;

(ஈ) இச்சட்டத்தின் 19 ஆம், 26 ஆம் பிரிவுகளின்கீழ் அரசுரிமைப் பணமாக அல்லது அறவீடுகளாக அபிவிருத்தியாளர்களாலும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களாலும் செலுத்தப்பட்ட தொகைகள் ;

(ஊ) எவையேனும் உயர்தொழில் சேவைகளை ஆற்றியமைக்கு சபையால் அறவிடப்பட்ட கட்டணங்கள் ;

(ஊ) நெய்யரி மீதான அல்லது நெய்யரிக்கு அப்பாலான புதுப்பிக்கப்படற்பாலதான வலுக்கருத்திட்டங்களை மேற்கொள்வதற்கென காணியின் அல்லது காணியிலான அக்கறையின் குத்தகையிலிருந்து குத்தகை, வாடகையாகப் பெறப்பட்ட பணம் ;

(எ) நெய்யரி மீதான அல்லது நெய்யரிக்கு அப்பாலான புதுப்பிக்கப்படற்பாலதான வலுக் கருத்திட்டங்களில் ஈடுபடுவதற்கு பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதற்காக அறவிடப்பட்ட கட்டணங்கள் ; அத்துடன்

(ஏ) அரசுக்காகவும் தனியார்துறை ஒழுங்கமைப்புகளுக்காகவும் அவற்றின் சார்பாகவும் புதுப்பிக்கப்படற்பாலதான வலு வளங்களின் அபிவிருத்தியுடனும் மற்றும் வலுச் சிக்கனம், வலுவை பேணிக்காத்தல் அத்துடன் தேவை முகாமைத்துவம் என்பவற்றின் மேம்பாட்டுடனும் தொடர்புடைய கருத்திட்டங்களின் பொறுப்பேற்பினின்று ஈட்டப்பட்ட கட்டணங்களும் பகிர்ந்து கொள்ளப்பட்ட சேமிப்புகளும்.

(3) வலு நிதியத்திலிருந்து பின்வருவனவற்றின் கொடுப்பனவுக்குத் தேவையான அத்தகைய பணத்தொகைகள் செலுத்தப்படுதல் வேண்டும் :–

(அ) தெரிவு செய்யப்பட்ட புதுப்பிக்கப்படற்பாலதான வலுவை மூலமாகக் கொண்ட வலு மாற்றப் பொறிகளுக்கான மானியக்கொடைகள் ;

(ஆ) வலுச்சிக்கனமான உபகரணங்களினதும் தொழில் நுட்பவியல்களினதும் பாவனையை ஊக்குவிப்பதற்கான மானியக் கொடைகள் ;

(இ) கைத்தொழில் அனல் உபகரணங்கள் உட்பட எரிபொருளுக்கு மாற்றுவதற்கான மூலதன மானியக்கொடை ;

(ஈ) இலங்கை வலுப்பாதுகாப்பை மேம்படுத்துதல் பற்றி பொதுசன ஊடகங்கள் ஊடாக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதில் உறப்பட்ட செலவுகள் ; அத்துடன்

(உ) வலுவைப் பேணிக்காக்கும் வழிமுறைகளை கடைப்பிடிப்பதனை ஊக்குவிப்பதற்கும் நாட்டின் எல்லா இடப்பரப்புகளிலும் கிராமிய வலுச் சேவைகளின் அபிவிருத்திக்கும் ஏதேனும் சங்கத்திற்கு அல்லது சமுதாய மட்டத்திலான ஒழுங்கமைப்பிற்கு ஊக்குவிப்புகள் அல்லது இதனையொத்த நிதியுதவி.

(4) சபையானது வலு நிதியத்தில் வரவிலிருக்கும் பணங்களை, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான தோதானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்யலாம் என்பதுடன், எவையேனும் அத்தகைய முதலீடுகளிலிருந்து திரளுகின்ற எல்லா வருமானமும் அத்தகைய நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(5) சபை வலு நிதியத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் பேணுவதற்கும் அத்துடன் அது தொடர்பில் தகுந்த கணக்குப் புத்தகங்களைப் பேணுவதற்கும் பொறுப்புடையதாதல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் 50 ஆம், 51 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் வலு நிதியத்தின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் ஏற்படையனவாதல் வேண்டும்.

நிலைபெறுதகு வலு உத்தரவாத நிதியம்.

**47.** (1) வலுச் சிக்கனம் தொடர்பில் ஏதேனும் கருத்திட்டத்தை மேற்கொள்வதற்கென கடன்களுக்கு விண்ணப்பிக்கும் முதலீட்டாளர்கள் சார்பில் உத்தரவாதங்களை அளிக்கும் நோக்கத்திற்கு "நிலைபெறுதகு வலு உத்தரவாத நிதியம்" என அழைக்கப்படும் நிதியமொன்று (இச்சட்டத்தின் "உத்தரவாத நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) உத்தரவாத நிதியத்தில் —

(அ) திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படவுள்ள ஆரம்ப மூலதன மானியமாகிய ரூபா ஐம்பது மில்லியன் ;

(ஆ) முதலீட்டாளருக்கு அளிக்கப்பட்ட உத்தரவாதத்தின் 0.5 சத வீதத்துக்குக் குறையாத ஆண்டுக் கட்டுப்பணமொன்று ;

(இ) எந்த முதலீட்டாளருக்கு உத்தரவாதங்கள் அளிக்கப்படுகின்றனவோ அந்த முதலீட்டாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட வட்டி, சேவைக்கட்டணம் மற்றும் தண்டப் பணங்கள் ;

(ஈ) அதிகாரசபையின் நிதியத்திலிருந்து கிடைக்கப்பெறக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்,

என்பன வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(3) உத்தரவாதங்களாகச் செலுத்தப்படவுள்ள தொகை அத்துடன் உத்தரவாதம் அளிக்கும் முறை, உத்தரவாதத்திற்கு உரித்தாவதற்கான தகைமைகள், உத்தரவாத நிதியத்தின் முகாமைத்துவம் தொடர்பான வேறு எல்லா விடயங்களும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் அமைச்சரால் விதித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 50 ஆம், 51 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் உத்தரவாத நிதியத்தின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*சபையின் கடனெடுக்கும் தத்துவங்கள்.*

**48.** (1) சபை, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் அமைச்சரின் சம்மதத்துடன் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தை ஈடுசெய்வதற்குச் சபைக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை மேலதிகப் பற்று என்ற வகையில் அல்லது வேறு வகையில் தற்காலிகமாகக் கடனெடுக்கலாம் :

ஆயின், இவ்வுட்பிரிவின்கீழ் சபையால் தற்காலிகமாகத் திரட்டப்பட்ட கடன்கள் தொடர்பில் நிலுவையிலிருக்கும் தொகைகளின் கூட்டு மொத்தம் ஏதேனும் நேரத்தில் நிதி என்னும்

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை விஞ்சுதலாகாது.

(2) சபை, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் அளிக்கப்பட்ட சம்மதத்துடன் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தற்காலிகக் கடன் என்றவாறன்றி வேறு வகையில் "நிலைபெறுதகு வலு அதிகாரசபை தொகுதிக்கடன்" என்று குறிப்பீடு செய்யப்படும் தொகுதிக்கடன்களின் வழங்கீட்டின் மூலம் தொழிற்படு மூலதனத்தை வழங்குவதற்கென பணத்தைக் கடனாகப் பெறலாம்.

(3) நிலைபெறுதகு வலு அதிகாரசபை தொகுதிக்கடன் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் அளிக்கப்பட்ட அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கிணங்க வழங்கப்படுதலும் கைமாற்றப்படுதலும், கையாளப்படுதலும் மீட்கப்படுதலும் அத்துடன் இல்லாதொழிக்கப்படுதலும் வேண்டும்.

*அரசாங்க உத்தரவாதம்.*

**49.** (1) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் 48 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட நிலைபெறுதகு வலு அதிகார சபைத் தொகுதிக்கடன்களின் முதலினதும் அத்துடன் அவற்றின் மீதான வட்டியினதும் மீளக் கொடுப்பனவுக்கு உத்தரவாதமளித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட உத்தரவாதமொன்றை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் ஏதேனும் பணத்தொகைக்கு பாராளுமன்றத்தின் முன்அங்கீகாரத்துடன் திரட்டுநிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட உத்தரவாதமொன்றை நிறைவேற்றும்வகையில் திரட்டுநிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய விதத்திலான வட்டியுடன் சேர்த்து அத்தகைய முறையிலும் அத்தகைய காலப்பகுதிக்குள்ளும் அதிகாரசபையால் மீளச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் உத்தரவாதமொன்று வழங்கப்பட்ட வுடனேயே நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அத்தகைய உத்தரவாதம் தொடர்பிலான கூற்றொன்றை பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் உத்தரவாதமொன்றை நிறைவேற்றும் வகையில் ஏதேனும் பணத்தொகை திரட்டுநிதியத்திலிருந்து செலுத்தப்படுமிடத்து, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் உத்தரவாதமாகச் செலுத்தப்பட்ட அத்தகைய பணத் தொகை பற்றிய கூற்றொன்றை உடனடியாக பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல் வேண்டும்.

**50.** (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். *நிதியாண்டின் கணக்குகளும், கணக்காய்வும்.*

(2) சபை அதிகாரசபையின் வருமானம், செலவினம், சொத்துக் கள், பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல் கள் பற்றிய தகுந்த கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித் தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் கணக்குகள் கணக்காய்வுக்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**51.** அதிகாரசபையின் நிதிசார்ந்த கட்டுப்பாடு மற்றும் கணக்கு கள் தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத் தின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும். *1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்புடைமை.*

## பாகம் IX

### அதிகாரசபையின் பணியாட்டொகுதி

**52.** (1) அதிகாரசபையின் பணிப்பாளர் –தலைமையதிபதியாக இருப்பதற்கென ஆளொருவர் சபையின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும். இவர் அதன் பிரதம நிறைவேற்று அலுவலராதல் வேண்டும். *அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி.*

(2) பணிப்பாளர்—தலைமையதிபதி சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் சமுகமளிக்கவும் அத்தகைய கூட்டங்களில் உரையாற்றவும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால், அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(3) பணிப்பாளர்—தலைமையதிபதி சபையின் பொதுப்பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய அதிகாரசபையின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நிர்வாகக் கட்டுப்பாடு உட்பட அதிகாரசபையின் எல்லா அலுவல்களையும் கொண்டுநடாத்துவதற்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(4) பணிப்பாளர்—தலைமையதிபதிக்கு அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சர் சபையுடனான ஒருப்பாட்டுடனும் அதற்கென காட்டப்படும் காரணங்களுக்காகவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்—தலைமையதிபதியை பதவியிலிருந்து அகற்றலாம்.

பணிப்பாளர் தலைமையதிபதி அவரது பணிகளைக் கையளிக்கலாம்.

**53.** பணிப்பாளர்—தலைமையதிபதி சபையின் அங்கீகாரத்துடனும் அவ்வாறு செய்தல் அவசியமென அவர் கருதுகின்றபோதும் இச்சட்டத்தால் அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் பணியை அல்லது கடமையை அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம் என்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய அத்தகைய பணியை அல்லது கடமையைப் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

பொது முகாமையாளர் தற்காலிகமாக சமுகமளிக்காமை.

**54.** பணிப்பாளர்—தலைமையதிபதி சுகயீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் அவரது பணிகள் அல்லது கடமைகள் எவற்றையும் புரியவோ அல்லது நிறைவேற்றவோ இயலாதிருக்கும்பொழுதெல்லாம், அத்தகைய அலுவலர் அமைச்சர் சபையின் ஒருப்பாட்டுடன் அவர் சமுகமாயிராதபொழுது அவரது இடத்தில் பதிற் கடமையாற்றுவதற்கு வேறு எவரேனும் சிரேஷ்ட அலுவலரை நியமிக்கலாம்.

*அதிகாரசபையின் பணியாட்டொகுதியின் நியமனம்.*

**55.** (1) சபை இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் திறமையாகப் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் வேறு ஊழியர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் வேறு ஊழியர்களுக்கும் அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகளினால் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் வீதங்களின்படியும் வேதனம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர்கள் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தோராதலும் வேண்டும்.

*அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களின் நியமனம்.*

**56.** (1) சபையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அந்த அலுவலரினதும் பொது நிர்வாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன் அதேபோன்ற சம்மதத்துடன் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையால் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து 1991ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) அதிகாரசபை, ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் குறித்துரைக் கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்கு சேவைபுரிய உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்கு செய்யப்படும் ஏதேனும் சேவையின் காலம் அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அரசாங்கத்திற்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க கூட்டுத்தாபனங்களில் அல்லது உயர் கல்வி நிறுவகங்க ளில் உள்ள அலுவலர்களின் நியமனம்.*

**57.** (1) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க கூட்டுத் தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஆளும் குழுவினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் சபையால் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிக மாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் சபையாலும் சம்பந்தப்பட்ட பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஆளும் குழுவாலும் உடன்பட்டுக்கொள்ளக்கூடியவாறு ஓய்வூதியம் அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பிலான நியதி நிபந்தனைகள் உட்பட அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) சபையின் வேண்டுகோளின்பேரில், ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் அலுவலர் அல்லது வேறு ஊழியர் அவ்வலு வலரினதும் அல்லது ஊழியரினதும் அந்த உயர்கல்வி நிறுவனத் தின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் சம்மதத்துடன் அதேபோன்ற சம்மதத்துடன் சபையால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட் டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் சபையாலும் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலராலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடிய வாறு ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பான நியதி நிபந்தனைகள் உட்பட அத்தகைய நியதி நிபந்தனைகள்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(3) ஆளெவரும் விடயத்திற்கேற்ப (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையின் பணியாட் டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து அத்தகைய ஆள் அதிகாரசபையின் வேறு எவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் X

### பொது

**58.** இச்சட்டத்தின்கீழ் சபை அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அத்துடன் புரிதல் தொடர்பில் அமைச்சர் சபைக்கு அத்தகைய விசேட அல்லது பொதுப் பணிப்புகளை காலத்துக்குக்காலம் விடுக்கலாம் என்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்குப் பயனளிப்பது சபையின் கடமையாதலும் வேண்டும்.

*அமைச்சரால் விடுக்கப்பட வேண்டிய விசேட மற்றும் பொதுப் பணிப்புகள்.*

**59.** (1) சபை இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அத்துடன் புரிதல் ஆகிய நோக்கத்திற்கு எல்லா அபிவிருத்தியாளர்களையும் அத்துடன் அனுமதிப்பத்திரமொன்று எவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதோ அந்த எல்லா அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களையும்,-

*பதிவேடுகளைப் பேணுமாறும் விவரத் திரட்டுகளைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தும் தத்துவம்.*

(அ) சபை அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கருமங்கள் தொடர்பிலும் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் பதிவேடுகளைப் பேணுமாறும் ; அத்துடன்

(ஆ) சபை அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கருமங்கள் தொடர்பிலும் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடைக்காலங்களிலும் அத்தகைய படிவங்களிலும் சபைக்கு விவரத் திரட்டுகளைக் கொடுத்துதவுமாறும்

தேவைப்படுத்தலாம்.

(2) அவ்வாறு பேணப்படும் பதிவேடுகளை விடயத்திற்கேற்ப அத்தகைய அபிவிருத்தியாளருக்கு அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலப்பகுதி முடிவுற்றதன் பின்னர் ஆறு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குப் பேணிக்காப்பது

(1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் பதிவேடுகளைப் பேணுமாறு தேவைப்படுத்தப்பட்ட எல்லா அபிவிருத்தியாளர் களினதும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களினதும் கடமை யாதல் வேண்டும்.

*தகவல் கோருவதற்கு அதிகார சபைக்குள்ள தத்துவம்.*

**60.** (1) சபையால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அதிகார சபையின் எவரேனும் அலுவலர், எழுத்திலான அறிவித்தல்மூலம், அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய காலப்பகுதியினுள், வலுவைக் கொள்ளுதல், களஞ்சியப்படுத்துதல், இடம்பெயர்த்தல், அனுப்புதல் மற்றும் ஏதேனும் வகையான வலுவை பயன்படுத்துதல் பற்றியும் அவ்வாறு செய்வதில் உறப்படும் செலவுபற்றியும் தகவல் கொடுத்துதவும்படியும், அவ்வறிவித்தலிற் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய ஆவணத்தைக் காண்பிக்கும்படியும் தேவைப்படுத்தலாம். இவ்வுட்பிரிவின்கீழான அறிவித்தலொன்றைப் பெறுகின்ற ஆள், அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் அவரது கடமையாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறிருப்பினும் இவ்வுட்பிரிவிலுள்ளதெதுவும், அத்தகைய தகவலை வெளியிடுதல் அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பித்தல் ஏதேனும் சட்டத்திலுள்ள ஏதேனும் ஏற்பாட்டினால் தடைசெய்யப்பட்டிருப்பின், அத்தகைய தகவலைக் கொடுத்துதவும்படி அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பிக்கும்படி எவரேனும் ஆளைத் தேவைப்படுத்துவதற்குச் சபையை அல்லது சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளை இயலச்செய்வதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

(2) பிரிவு 59இன்கீழ் கொடுத்துதவப்பட்ட விவரத்திரட்டொன்றில் அடங்கியுள்ள தகவலும் அல்லது இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின் நியதிகளுடன் இணங்கியொழுகி கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவலும் அல்லது கொடுத்துதவப்பட்ட ஆவணமொன்றின் உள்ளடக்கங்களும் விடயத்திற்கேற்ப அத்தகைய விவரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவுகின்ற அல்லது அத்தகைய ஆவணத்தை

முன்வைக்கின்ற ஆளின் சம்மதத்துடன் அல்லது இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கும் போதும் நிறைவேற்றும்போதும் புரியும்போதும் தவிர, சபையால் வெளியிடப்படுதலோ அல்லது வேறு எவரேனும் ஆளுக்குத் தெரிவிக்கப்படுதலோ ஆகாது.

**61.** (1) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவம், கடமை அல்லது பணி எதனையும் பிரயோகிக்கும், நிறைவேற்றும் அல்லது புரியும் நோக்கத்திற்கு ஏதேனும் தேடுகையை, மதிப்பீட்டை, பரிசோதனையை அல்லது புலனாய்வை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக ஏதேனும் நியாயமான நேரத்தில் கட்டிடத்தில், நிறுவுகைகளில் அல்லது வளவுகளில் உட்புகுவது சபைக்கு அல்லது அதன் சார்பில் விசேடமாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் எவரேனும் உறுப்பினருக்கு அலுவலருக்கு அல்லது வேறு ஊழியருக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.

*கட்டிடங்களிலும் வளவுகளிலும் உட்புகுதலும் பரிசோதனை செய்தலும்.*

(2) ஏதேனும் தேடுகையை, மதிப்பீட்டை பரிசோதனையை அல்லது புலனாய்வை மேற்கொள்ளும் நோக்கத்திற்கு ஓராம் உட்பிரிவின்கீழ் கட்டிடத்தில், நிறுவுகையில் அல்லது வளவுகளில் உட்புகுவதற்கான சம்மதம் விடயத்திற்கேற்ப கட்டிடத்தின், நிறுவுகையின் அல்லது வளவுகளின் சொந்தக்காரரிடமிருந்து அல்லது இருப்பாட்சியாளரிடமிருந்து அல்லது அதற்குப் பொறுப்பான ஆளிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பெறப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட சம்மதம் நியாயமற்ற முறையில் மறுக்கப்படுமிடத்து, அதிகாரசபையானது விடயத்திற்கேற்ப அத்தகைய கட்டிடம், நிறுவுகை அல்லது வளவுகள் அமைந்துள்ள இடப்பரப்பின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானிடமிருந்து, தேவைப்படுத்தப்பட்ட தேடுகையை, மதிப்பீட்டை, பரிசோதனையை அல்லது புலனாய்வை மேற்கொள்வதற்கு அத்தகைய கட்டிடத்தில், நிறுவுகையில் அல்லது வளவுகளில் உட்புகுவதற்கென அதன்கண் பெயர்குறிப்பிடப்பட்ட அலுவலரொருவருக்கு அதிகாரமளிக்கும் தேடுகை எழுத்தாணை ஒன்றைப் பெறலாம்.

(4) சபையில் எவரேனும் உறுப்பினர் அல்லது அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினர் அலுவலர் அல்லது ஊழியர்

இப்பிரிவின்கீழ் அவரது கடமையை நிறைவேற்றுகையில் அவரை தடைசெய்கின்ற ஒவ்வோர் ஆளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தவறுகள்.

**62.** (அ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்படுகின்ற அல்லது அவற்றிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ;

(ஆ) சபையால் 59 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்படும்பொழுது ஏதேனும் விவரத்திரட்டைக் கொடுத்துதவத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற;

(இ) சபையால் 60 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்படும்பொழுது ஏதேனும் தகவலைக் கொடுத்துதவ அல்லது ஏதேனும் ஆவணத்தை முன்வைக்கத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற ; அத்துடன்

(ஈ) பிரிவு 59இன்கீழ் கொடுத்துதவப்பட்ட விவரத்திரட்டில் ஏதேனும் பொய்யான கூற்றைச் செய்கின்ற அல்லது 60 ஆம் பிரிவின்கீழ் அறிந்திருந்தும் ஏதேனும் பொய்யான தகவலைக் கொடுத்துதவுகின்ற

ஒவ்வோராளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ; அத்துடன் தொடர்ந்தும் தவறொன்றின் விடயத்தில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஆயிரம் ரூபா குற்றப்பணம் ஒன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படும் தவறுகள்.

**63.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது -

(அ) ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருப்பின் அத்தகைய தவறுபுரியப்படும்போது அக்குழுவின் ஒரு பணிப்பாளராக, பிரதம நிறைவேற்று அலுவலராக, செயலாளராக அல்லது இவர்களையொத்த வேறு அலுவலராக இருந்த ஒவ்வோராளும் ; அல்லது

(ஆ) அக்குழு கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாக இருக்குமிடத்து தவறுபுரியப்படும் நேரத்தில் அக்குழுவின் தலைவராக, முகாமையாளராக, செயலாளராக அல்லது இவர்களையொத்த வேறு அலுவலராக இருந்த ஒவ்வோராளும்,

அத்தகைய தவறு அவரது அறிவுக்கு எட்டாமலேயே புரியப்பட்டது அல்லது அத்தகைய தவறுபுரியப்படுவதைத் தடுப்பதற்குத் தாம் எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தார் என எண்பித்தாலன்றி அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

**64.** (1) அதிகாரசபையின் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் கொணரப்பட்ட ஏதேனும் குற்றவழக்கில் அல்லது துடர்ச்சியில் அதனால் உறப்பட்ட எல்லாச் செலவுகள் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் அத்தகைய குற்றவழக்கில் அல்லது துடர்ச்சியில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் அதிகாரசபையின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும். *செலவுகள் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல்.*

(2) சபையின் ஓர் உறுப்பினரால், குழுவின் அல்லது மதியுரைக் குழுவொன்றின் உறுப்பினர் ஒருவரால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியால் அல்லது அதிகாரசபையின் வேறு அலுவலரால் அல்லது ஊழியரால் அல்லது அவருக்கெதிராக விடயத்திற்கேற்ப இச்சட்டத்தின்கீழ் அல்லது அமைச்சரின் அல்லது சபையின் பணிப்புகளின்மீது அத்தகைய ஆளினால் புரியப்பட்ட அல்லது புரியப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் கொணரப்பட்ட ஏதேனும் குற்றவழக்கில் அல்லது துடர்ச்சியில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள்

அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் புரியப்பட்டது என நீதிமன்றம் தீர்மானித்தால் அத்தகைய செலவுகள் அத்தகைய குற்றவழக்கில் அல்லது துடர்ச்சியில் அவரால் அறவிடப்பட்டாலன்றி அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*அதிகாரசபை அட்டவணையிடப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படுதல்.*

**65.** அதிகாரசபை (27 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணையிடப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

*உறுப்பினர்கள், அலுவலர்கள் முதலானோர் பகிரங்க ஊழியர்களாகக் கருதப்படுதல்.*

**66.** சபையினதும் குழுவினதும், மதியுரைக்குழுக்களினதும் உறுப்பினர்களும், பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரசபையின் அலுவலர்கள் அத்துடன் வேறு ஊழியர்கள் ஆகியோரும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஒழுங்கு விதிகள்.*

**67.** (1) அமைச்சர், விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளனவோ அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதிபடக்கூடிய விரைவில் அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியிலிருந்து அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டுமோ அத்தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*விதிகள்.*

**68.** (1) இச்சட்டத்தின்கீழ் எந்த கருமங்களுக்கு விதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றனவோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றனவோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் சபை விதிகளை ஆக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் அதிகாரசபையால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதியொன்று அது அமைச்சரால் அங்கீகரிக்கப்படும்வரையும் அத்துடன் அதன் பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்படும் வரையும் பயன் எதனையும் கொண்டிருத்தலாகாது.

*நீக்கமும் பேணலும்.*

**69.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வலுப்பேணிக்காத்தல் சட்டம் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

(2) மேற்சொல்லப்பட்ட சட்டம் நீக்கம்செய்யப்படுவது எவ்வாறிருப்பினும் :—

(அ) வலு பேணிக்காத்தல் நிதியத்தால் செய்துகொள்ளப்பட்டவையும் அல்லது நிறைவேற்றப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று நிலைத்திருப்பவையுமான எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அத்துடன் வேறு சாதனங்களும் அதிகாரசபையால் செய்துகொள்ளப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தங்களாக, உடன்படிக்கைகளாக அல்லது வேறு சாதனங்களாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) வலுப்பேணிக்காத்தல் நிதியத்தால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு உடனடியாக முந்திய நாளன்று முடிவுறாதிருப்பவையுமான எல்லாக் குற்றவழக்குகளும் துடர்ச்சிகளும் அதிகாரசபையால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்பட்ட குற்ற வழக்கு களாகவும் துடர்ச்சிகளாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(இ) வலுப்பேணிக்காத்தல் நிதியத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கடப்பாடுகளும் அதிகாரசபையின் தனிசுகளாகவும் பொறுப்புகளாகவும் கடப்பாடுகளாக வும் கருதப்படுதல் வேண்டும் ;

(ஈ) ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கைகளில் ஏதேனும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் வலுப் பேணிக்காத்தல் நிதியத்திற்குச் சாதகமாக அல்லது அதற்கு எதிராகப் பதியப்பட்ட தீர்வை, கட்டளை அல் லது தீர்ப்பு ஒவ்வொன்றும் நியமித்த தேதியிலிருந்து அதிகாரசபைக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராகப் பதியப்பட்ட ஒரு தீர்வையாக, கட்டளையாக அல்லது தீர்ப் பாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற் கிணங்க வலுவுக்கிடவும்படலாம் ; அத்துடன்

(உ) நியமித்த தேதிக்கு உடனடியாக நேர்முந்திய நாளன்று பதவி வகிப்ப வரும் :-

(i) அதிகாரசபையுடன் தொழில் வழங்கப்பெறுப வரும் அத்தகைய முனைவை ஏற்றுக்கொள்ப வருமான வலுப் பேணிக்காத்தல் நிதியத்தின் அலுவலர் மற்றும் சேவையாளர் ஒவ்வொரு வரும் நியமித்த தேதிக்கு நேர் முந்திய நாளன்று அவர்களுக்கு ஏற்புடைத்தான தொழில் நியதி நிபந்தனைகளுக்குக் குறைந்த அனுகூலங்களாக இல்லாதவையான அத்தகைய நியதி நிபந்தனை கள் மீது அதில் தொழிலுக்கமர்த்தப்படுதல் வேண்டும் ; அல்லது

(ii) அதிகாரசபையுடன் தொழில் வழங்கப்பெறாத வர்களும் அல்லது அத்தகைய தொழில் வழங்கப் பட்டு அத்தகைய முன்வரவை ஏற்றுக்கொள்ளா தவர்களுமான வலுப்பேணிக்காத்தல் நிதியத் தின் அலுவலர் மற்றும் சேவையாளர் ஒவ்வொரு வரும் சபையுடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நட்டஈட்டின் கொடுப்பனவுக்கு உரித் துடையவராதல் வேண்டும்.

பொருள் கோடல்.

**70.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி —

"உயிரியல் தொகுதி வலு" என்பது, உயிரியல் முறைவழியொன்றிலிருந்து எரித்தல், நொதிக்கச் செய்தல், செரிமானம் போன்ற முறைவழிகளினால் பிறப்பிக்கப்படும் பொருள் வடிவத்தை மாற்றுவதன் மூலம் பெறப்படக் கூடிய வலு என்று பொருள்படும் ;

"குழு" என்பது, இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவால் தாபிக்கப்பட்ட கருத்திட்ட அங்கீகாரக் குழு என்று பொருள்படும் ;

"அபிவிருத்தியாளர்" என்பது, நெய்யரி மீதான புதுப்பிக்கப் படற்பாலதான வலுக் கருத்திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் எந்த ஆளுக்கு அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படுகின்றதோ அந்த ஆள் என்று பொருள்படும் ;

"வலுப் பேணிக்காத்தல்" என்பது, ஒன்றில் சேவைகளை முழுமையாக நிறுவுவதன்மூலம் அன்றேல் சேவை விநியோகத்தை மட்டுப்படுத்துவதன் மூலம் பாவனையாளர் ஒருவருக்கு விநியோகிக்கப்படும் அத்தியாவசியமற்ற குறித்தசில சேவைகளை இழத்தல் என்று பொருள்படும் ;

"வலுச் சிக்கனத்தின் மேம்பாடு" என்பது, அவ்வாறு வழங்கப்படும் சேவையின் தரத்தைப் பாதிக்காமல் குறிப்பிட்டவொரு சேவையை விநியோகிப்பதற்குத் தேவைப்படும் உள்ளவாறான வலுப் பாவனையைக் குறைப்பதற்கென கடைப்பிடிக்கப்படும் முயற்சிகள் என்று பொருள்படும் ;

"பசுமை நிதியங்கள்" என்பது, சலுகை நியதிகளில் கிடைக்கக் கூடிய அல்லது கிடைக்காத, கோளின் சுற்றாடலையும் பல்லின உயிர் வாழ்வையும் பேணிக்காப்பதற்கு எடுக்கப் படும் தொடக்க முயற்சிகளுக்குள்ள நிதியளிப்பு என்று பொருள்படும் ;

"நீரியல் வலு" என்பது, எதிர்விளைவு மற்றும் கணித்தாக்கு போன்ற முறைவழியின் ஊடாக அசையும் நீர்த்தொகுதியொன்றிலிருந்து பெறப்படக்கூடிய வலு என்று பொருள் படும் ;

"நெய்யரிக்கு அப்பாலான புதுப்பிக்கப்படற்பாலதான வலுக் கருத்திட்டம்" என்பது, உள்ளூர் இடப்பரப்பொன்றினுள் பாவனைக்கானதும் ஏதேனும் அபிவிருத்தியடைந்த இடப்பரப்பினுள் மேற்கொள்ளக்கூடியதும் அல்லது முடியாததுமான வலுவின் ஒரு வடிவத்தை வலுவின் மற்றொரு வடிவமாக மாற்றும் நிறுவுகை என்று பொருள்படும் ;

"நெய்யரிக்கு அப்பாலான வலுப் பாவனையாளர் சங்கம்" என்பது, தேசிய நெய்யரியுடன் தொடுக்கப்படாத விநியோகவலையமைப்பொன்றின் ஊடாக அதன் உறுப்பினர்களுக்கு மின்சாரத்தை பிறப்பித்து விநியோகிக்கும் குறிக்கோள்களுடன் குறிப்பிட்டவொரு புவியியல் இடப்பரப்பினுள் புதுப்பிக்கப்படற்பாலதான வலு வளங்களை அபி விருத்தி செய்து பயன்படுத்துவதற்கு இயைபான மாகாணசபையுடன் முறையாகப் பதிவு செய்யப்பட்ட வலுப் பாவனையாள் சமுதாயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏதேனும் ஒழுங்கமைப்பு என்று பொருள்படும்;

"நெய்யரிமீதான புதுப்பிக்கப்படற்பாலதான வலுக் கருத்திட்டம்" என்பது, ஏதேனும் வடிவத்திலான புதுப்பிக்கப்படற்பாலதான வலுவை மின்சாரமாக மாற்றுவதும் அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட மின்சாரத்தை இலங்கை மின்சார சபையால் தொழிற்படுத்தப்படும் தேசிய மின்சார நெய்யரிக்கு ஊட்டுவதும் ஏதேனும் அபிவிருத்தி இடப்பரப்பினுள் மேற்கொள்ளப்படுவதுமான ஒரு நிறுவுகை என்று பொருள்படும் ;

"அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்" என்பது, நெய்யரிக்கு அப்பாலான வலுக்கருத்திடடமொன்றில் ஈடுபடுவதற்கு இச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் எந்த ஆளுக்கு அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்படுகின்றதோ அந்த ஆள் என்று பொருள்படும் ;

"இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு" என்பது, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு என்று பொருள்படும் ;

"புதுப்பிக்கப்படற்பாலதான வலுமூலவளம்" என்பது, இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தினுள் வருங்காலச் சந்ததியினருக்கு அவர்களது பாவனைக்கென வலுவைச் சேமிக்கும் வாய்ப்பைப் பாதிக்காமல் ஆற்றலை வலுவைப்பயன்படுத்தக்கூடிய சூரிய அல்லது நிலத்தியல் அலை செயற்பாட்டிலிருந்து உருவாகுவதுமான இயக்கத்தாக்கியல் அல்லது அனல் வலு மூலங்கள் என்று பொருள்படும் என்பதுடன் உயிரியத்தொகுதி வலு, நீரியல் வலு, சூரிய வலு அத்துடன் காற்று வலு என்பவற்றையும் உள்ளடக்கும் ;

"கிராமிய வலுச் சேவைகள்" என்பது, தேசிய மின்சார நெய்யரி அல்லது பெற்றோலிய உற்பத்திப் பொருள் விநியோக மார்க்கங்கள் போன்ற நவீன வர்த்தக ரீதியிலான வலு வழங்கல் மார்க்கங்களால் நிறைவேற்ற முடியாத கிராமிய சமுதாயத்தின் அல்லது கிராமிய தொழில் முயற்சியொன்றின் அடிப்படை வலுத் தேவைப்பாடுகள் என்று பொருள்படும் ;

"சூரிய வலு" என்பது, இடைமறித்தல், செறிவாக்கல், அத்துடன் குவிமையப்படுத்துதல் மூலம் அல்லது வேறு ஏதேனும் வழிமுறையால் சூரிய கதிர்வீச்சிலிருந்து பெறக்கூடிய வலு என்று பொருள்படும் ;

"நிலைபெறுதகு வலு" என்பது, வருங்காலத்திலும் அதே மட்டத்திலான மூலவள பயன்பாட்டை வழங்குவதனை பாதிக்காமல் பயனுள்ள பணிக்காக சேமிக்கக்கூடிய ஏதேனும் வலு மூலவளம் என்று பொருள்படும் ; அத்துடன்

"காற்று வலு" என்பது, எதிர்விளைவு மற்றும் கணத்தாக்கம் போன்ற முறைவழிகளினூடாக அசையும் காற்றுத் தொகுதியிலிருந்து பெறக்கூடிய வலு என்று பொருள்படும்.

*உளதாம் கருத்திட்டங்கள்.*

**71.** (1) நியமிக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் நெய்யரிமீதான அல்லது நெய்யரிக்கு அப்பாலான கருத்திட்டமொன்றான ஏதேனும் புதுப்பிக்கப்படற் பாலதான வலுக்கருத் திட்டத்தைக் கொண்டு நடாத்தும் எல்லா ஆட்களும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டிற்குள் அத்தகைய ஆட்கள் அத்தகைய கருத்திட்டத்தைத் தொடர்ந்து செய்வதனை இயலச் செய்வதற்கு அனுமதிப்பத்திரமொன்றுக்கு விண்ணப்பம் செய்து அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர மொவ்வொன்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வும் —

(அ) நெய்யரிமீதான புதுப்பிக்கப்படற்பாலதான வலுக் கருத்திட்டமொன்றின் விடயத்தில் 18ஆம் பிரிவினால் குறிப்பீடுசெய்யப்பட்ட இருபது ஆண்டு காலப்பகுதியைக் கழித்த பின்னர் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட தேதியிலிருந்து அது தொழிற்பாட்டி லிருந்த காலப்பகுதிக்கும் ; அத்துடன்

(ஆ) நெய்யரிக்கு அப்பாலான வலுக்கருத்திட்டமொன்றின் விடயத்தில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்த கைய காலப்பகுதிக்கும் ,

செல்லுபடியாதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

**72.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை** *(பிரிவு 3 (2))*

*நியமனம் பெறுவதிலிருந்து தகைமை யிழத்தல்.*

**1.** ஆளொருவர் –

(அ) அவர் பாராளுமன்றத்தின் அல்லது மாகாண சபையொன்றில் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது உறுப்பினராகவரின் ; அல்லது

(ஆ) அவர் ஒரு இலங்கைப் பிரசையாக இல்லாவிடில் அல்லது இல்லாதொழியின் ; அல்லது

(இ) அவர் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின் ; அல்லது

(ஈ) அவர் இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மறியற் தீர்ப்பொன்றை அனுபவித்துக்கொண்டிருப்பின் அல்லது அனுபவித்திருப்பின் ; அல்லது

(உ) அவர் துர்நடத்தைக்காக அதிகாரசபையின் உறுப்பாண்மையிருந்து அகற்றப்பட்டிருப்பின்,

சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமை யிழந்தவராதல் வேண்டும்.

*உறுப்பினர்களின் பதவிக்காலம்.*

**2.** நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் இறப்பினால், பதவி விலகுவதானால் அல்லது அகற்றப்படுவதானால் பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி மீள நியமனத்திற்கு தகுதியுடையவராதலும் வேண்டும்.

*நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் நியமனத்தை முடிவுறுத்துதல்.*

**3.** (1) அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் நியமிக்கப்பட்டசபையின் தவிசாளரை அல்லது வேறு எவரேனும் உறுப்பினரை உடல் அல்லது உள வலிமையீனத்துக்காக அல்லது அமைச்சரின் அபிப்பிராயப்படி சபைக்கு அபகீர்த்தியை உண்டுபண்ணும் சாத்தியமுள்ள ஏதேனும் செயலுக்காக அல்லது விடயத்திற்காக பதவியிலிருந்து அகற்றலாம்.

(2) தவிசாளரால் அல்லது வேறு எவரேனும் நியமிக்கப் பட்ட உறுப்பினரால் பதவி வறிதாக்கப்படும் பட்சத்தில் அத்த கைய உறுப்பினரைப் பின்னுறுவதற்கு அமைச்சர் வேறோர் ஆளை நியமிக்கலாம்.

*உறுப்பினர் களின் லீவு.*

**4.** சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் சுகயீனம் காரணமாக, பலவீனம் காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு இலங்கை யில் இல்லாதிருப்பதன் காரணமாக அவரது கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து அத்தகைய இயலாமை பற்றி அமைச்சருக்கு எழுத்தில் அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அதன் மீது அமைச்சர் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ)என் னும் பந்தியை கருத்திற்கொண்டு அவர் இல்லாத போது அவரது இடத்தில், பதிற் கடமையாற்றுவதற்கு வேறோர் ஆளை நியமிக்கலாம்.

*உறுப்பினர் களின் ஊதியம்.*

**5.** சபை உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களின்படியும் ஊதியம் வழங் கப்படலாம்.

*சபையின் கூட்டங்கள்.*

**6.** (1) சபையின் தவிசாளர் சமுகமாயிருப்பின் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். ஏதேனும் அத்தகைய கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயிராத விடத்து சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத் திற்குத் தலைமை தாங்குவதற்கென உறுப்பினர்களுள் ஒருவ ரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(2) பதவிவழி உறுப்பினர் ஒருவர் தவிர்க்கமுடியாத ஏதேனும் சந்தர்ப்பங்களின் காரணமாக குறிப்பிட்டவொரு தேதியன்று நடைபெறவுள்ள சபையின் ஏதேனும் கூட்டத்திற் குச் சமுகமளிக்க இயலாதவராக இருப்பின் அத்தகைய கூட் டத்தை அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஏதேனும் நேரத்தில் எழுத்திலான முன்னறிவித்தலுடன் அவரைப் பிரதி நித்துவப்படுத்தவென வேறோர் ஆளைப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன் சபையா னது அதன் கூட்டங்களை நடத்துதல் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் என்பன தொடர்பில் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

*உறுப்பினர்களால் அக்கறை வெளிப்படுத்தப் படுதல்.*

**7.** சபையால் நிறைவேற்றப்படும் அல்லது நிறைவேற்ற உத்தேசிக்கப்படும் ஏதேனும் அலுவலில் நேரடியாகவோ நேரடியாக அல்லாமலோ அக்கறை கொண்டுள்ள சபையின் உறுப்பினர் ஒருவர் அத்தகைய அலுவல் கலந்துரையாடப்

படும் சபைக் கூட்டத்தில் அத்தகைய அக்கறையின் இயல்பை வெளிப்படுத்துதல் வேண்டும். வெளிப்படுத்துகை சபையின் கூட்டக் குறிப்புகளில் பதிவு செய்யப்படும் என்பதுடன் அத்தகைய உறுப்பினர் அத்தகைய அலுவல் தொடர்பில் சபையின் ஏதேனும் தீர்மானத்தில் அல்லது முடிபில் பங்கு பற்றுதலும் ஆகாது என்பதுடன், அத்தகைய தீர்மானம் செய்யப்படும்போது அல்லது அத்தகைய முடிவு எடுக்கப் படும்போது அத்தகைய கூட்டத்திலிருந்து வெளியேறுதலும் வேண்டும்.

*நியமனத்திலுள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக நடவடிக்கை முறைகள் செயல் அல்லது முடிவு செல்லுபடியற்றதாகக் கருதப் படுதலாகாது.*

**8.** சபையின் செயல் செய்யாமை அல்லது நடவடிக்கை முறை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிட மொன்று உள்ளது அல்லது உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினால் மாத்திரம் செல்லுபடியற்றதாதலாகாது.

*அதிகார சபையின் இலச்சினை.*

**9.** அதிகாரசபையின் இலச்சினை –

(அ) சபை காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஆட்களின் கட்டுக் காப்பிலிருத்தல் வேண்டும் ;

(ஆ) சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ; அத்துடன்

(இ) சபையின் அங்கீகாரமின்றியும் சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையில் அன்றியும் சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக் கப்படுதலாகாது. இவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்